Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–26 | 10 –08–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –174

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9957)



# யாழ். உசன் பிரதேச மக்கள் திரண்டு

# தென்மராட்சி பி.செ. முன் மறியல்

## தம்மை மீளக்குடியேற அனுமதிக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**தென்மராட்சி உசன் பிரதேச மக்கள் நூற்றுக்கணக்கானோர் திரண்டு சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று மாபெரும் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் முடக்கிவைக்கப்பட்டுள்ள தமது வாழ்விடங்கள் விடுவிக்கப்பட்டு அங்கு மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் எனக்கோரி இடம்பெற்ற இப்போராட்டத்தில் பொதுமக்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்**

மக்களது இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அதில் கலந்து கொண்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், சி.சிவநேசன், மாவை சேனாதிராசா, பத்மினி, சிதம்பரநாதன் ஆகியோர் அவ்விடத்திற்கு விஜயம் செய்துபோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மக்களது கோரிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)





## புலிகள் இருவர்கைது!

அக்கரைப்பற்றில் இருவிடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கருணாவின் ஆதரவாளர்கள் மூவரைக் கடத்திச் செல்ல முயன்றதாகப் பொலிசார் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டியதையடுத்தே இவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடு தழுவிய ரீதியில் பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் தொகை அதிகரிப்பு

பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சென்ற வாரம் வெளியானதைத் தொடர்ந்து, சிறிலங்கா பல்கலைக்கழக அனுமதிக்கான விசேட குழு வெளியிட்டுள்ள தகவலின்படி, இம்முறை அனைத்துத் துறைகளிலும் வழமையை விடக் கூடியளவு மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என்.மென்டிஸ் தெரி வித்துள்ள கருத்தின்படி, இவ்வருடம் யாழ். பல்கலைக் கழகம், றுகுணு பல்கலைக் கழகம் ஆகியன அதன் அனைத்துத் துறைகளையும் இயங்க வைக்கவுள்ளதாகவும், ஏனைய பல்கலைக்கழகங்களிலும் அனைத்துத் துறை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.கண்ணிவெடி அகற்றும் விசேட பிரிவு அதிகாரி வருகை

அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் பிரிவின் முக்கியஸ்தர் றிச்சட் ஹிட் அதே பிரிவைச் சேர்ந்த பிரதி இயக்குனர் கேணல் ஸ்ரூவேட் ஹரீசும் இந்த வாரம் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வரவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இங்கு வரும் இந்த நிபுணர்கள்யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசங்களில் சிறிலங்காப் படையினர் கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவார்

(12ஆம் பக்கம் பார்க்க)

-ஓமந்தையிலிருந்து சம்பூருக்கு-

## புலிகள் செல்ல பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

ஓமந்தையிலிருந்து திருகோணமலை சம்பூர் பிரதேசம் வரை செல்லவிருந்த விடுதலைப் புலிகளின் 95 உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு மறுத்திருக்கிறது.


இவர்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.இந்த அனுமதியை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாகவே கேட்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணமாகவும், தற்போது அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமை காரணமாகவும் இந்த தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சு கூறியுள்ளது.

## சமாதானம் நிலைநிறுத்தப்பட்டாலே அபிவிருத்திகள் சாத்தியமாகும்!

**- யாழ்.இல் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

அரசு- புலிகளுக்கிடையான பேச்சுவார்த்தைகள் தொடரப்பட்டு சமாதானம் நிலை பெற்றாலே இந்த அபிவிருத்திகள் சாத்தியப்பாடுடையதாக இருக்கும். இதனால், உடனடியாகவே புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க சனாதிபதி திட்டமிட்டுள்ளார் என சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த



தனபால தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் வருகை தந்த ஜயந்த தனபால யாழ். நகரில் உள்ள புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெற்ற மாவட்டங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி தேர்தலில் மீண்டும் சந்திரிகா போட்டியிட முடியாது

**- அரசியல் யாப்பு விவகார அமைச்சர் தெரிவிப்பு**

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எந்தவிதத்திலும் மூன்றாவது தடவையாக சனாதிபதி பதவிக்கு போட்டியிட முடியாதென அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி.ஏ முனசேகரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சனாதிபதி நாட்டின் பிரஜை என்ற வகையில் பாராளுமன்றத்தில் பிரவேசிக்க எவ்வித தடையும் கிடையாது. ஆனால் மூன்றாவது தடவையாக எந்த விதத்திலும் சனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் யாழ். அரச செயலகம் முன் மறியல்

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல் வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகள் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ். அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

அண்மையில் அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு நியமனங்களுக்காகப் பட்டதாரிகளைத் தெரிவு செய்தபோது உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப் படாமையைக் கண்டித்தே இம்மறியல் போராட்டம் இடம்பெற்றது.

நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் ஒன்று திரண்டு மேற்கொண்ட இப்போராட்டத்தால் யாழ். செயலகப்பணிகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

பாதிக்கப்பட்ட பட்டதாரிகளின் இப்போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவநேசன், மாவை சேனாதிராசா, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு தமது ஆட்சேபங்களை வெளியிட்டதுடன் இதன் இறுதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களால் மகஜர்களும் யாழ். மேலதிக அரச அதிபர் சிவசுவாமியிடம் கையளிக்கப்பட்டன. (33)



## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி லேமனேட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்துகொள்ள பிள்ளையார் பொத்தகசாலை கண்டி வீதி கிளிநொச்சி. T/P.021 228 5750 (சி/10064)

### தவறிவிட்டது

நடராஜா மோகனவதனன் இல25 கோணாவில் அக்கராயன் எனும் முகவரியுடைய எனது தே.அ.அ. 803085048vயும்,நிரந்தர அனுமதி அட்டை, சாரதிப்பத்திரம், வங்கி KIT CARD மற்றும் ஆவணங்களுடன் முறிப்பிற்கும் காந்திக் கிராமத்திற்குமிடையில் 08.08.2004 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் தகவல் ந.மோகனவதனன். (4894)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


எமது நிறுவனத்தில் கணினிப் பிரிவில் கல்வி பயின்று இதுவரை கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. எனவே இதுவரை கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் உடனடியாக அதற்கான விண்ணப்பத்தினை எமது நிறுவனத்திற்கு 20.08.2004 இற்கு முன்னர் பூரணப்படுத்தி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்,
இ. செ. சங்கம்,
கிளிநொச்சி. (4895)

# கிளி.பண்பாட்டு மண்டபத்தில் 'நியாப்' 2ஆம் கட்ட அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

உலக வங்கியின் நிதியீட்டத்துடன் செயற்பட்டு வரும் 'நியாப்' எனப்படும் வடக்கு -கிழக்கு நீர்ப்பாசன விவ



சாயத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் தனது 1ஆம் கட்டப் பணிகளை முடித்துக்கொண்டு இரண்டாம் கட்டச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது. நியாப் இரண்டாம் கட்ட அறிமுகவிழா நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் ஏற்றிவைக்க, நிகழ்வின் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளரும், மாதர்சங்க அங்கத்தவரும் கமக்கார அமைப்பு சம்மேளனத் தலைவரும் ஏற்றிவைத்தனர். பின்னர் அரங்க நிகழ்வுகள் குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் வரவேற்பு நடனத்தோடு ஆரம்பமாகியது. வரவேற்புரையினை பிரதிதிட்டப் பணிப்பாளர் வினோதராஜ் நிகழ்த்த, தலைமையுரையினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நிகழ்த்தினார் . அடுத்து 'நியாப்' திட்டம் 01 இன் பெறுபேறுகள் ஆராயப்பட்டன, அடுத்து கமக்கார அமைப்பு சம்மேளனத் தலைவர் 'நியாப்' செயற்பாடுகள் பற்றி உரை நிகழ்த்த தொடர்ந்து நியாப் திட்டம் பகுதி இரண்டின் செயற்பாடுகளும், இரணைமடு குளப்புனரமைப்பின் தேவைகளும் ஆராயப்பட்டன இவ் ஆய்வு விளக்கத்தினை 'நியாப்' நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி கோ.முகுந்தன் நிகழ்த்தினார். அடுத்து விவசாயிகள் 'நியாப்' திட்டம் பற்றிய தமது கருத்துக்களை வெளியிட்டனர்.தொடர்ந்து நியாப் திட்டம் பற்றிய மடல் வெளியிடப்பட்டது. அடுத்து நியாப் திட்டத்தினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, நியாப்திட்ட உதவியாளர் அ.விஜய கிருஸ்ணன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிராம மட்ட அமைப்புக்களின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச.தீ)

### புது. பொன்னம்பலம் மருத்துவமனையில்

## அமெ.பொதுமருத்துவ நிபுணர்களிடம் மருத்துவ ஆலோசனை பெறலாம்

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவ நிபுணர்களால் பொது மருத்துவம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இன்றும், நாளையும் குறிப்பாக சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான வைத்திய ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளது.

பயன்பெற விரும்புவோர் இன்றும், நாளையும் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பகுதிக்கு வருகைதரும் வண்ணம் மருத்துவமனைப் பணிப்பாளர் வேண்டுகைவிடுத்துள்ளார். (சோ,கு)

## குளம் பழுதடைந்தமையினால் 85 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பெரியபுளியங்குளத்தில் உள்ள குளம் நீண்டகாலமாக எதுவிதமான திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படாது குளக்கட்டுச்சீரழிந்த நிலையிலும், துருசு பழுதடைந்த நிலையிலும் கலிங்கு உடைவு ஏற்பட்ட நிலையிலும் உள்ளதால் மேற்படி குளத்தின் கீழ் சுமார் 85 ஏக்கர் நெற்செய்கையாளர்கள் காலங்காலமாக அவலப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய சமாதானச் சூழலில் அபிவிருத்திப் புனரமைப்புக்கள் நடைபெற்று வரும் இக்காலத்தில் மேற்படி குளத்தினையும் புனரமைப்புச் செய்து தமது அவலத்தை நீக்குமாறு அப்பகுதி நெற்செய்கையாளர்கள் கேட்டு வருகின்றனர். 11அடி நீர் கொள்ளளவான குளம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## புதுக்குடியிருப்பு பகுதியில் வீசப்படும் கழிவுகளால் துர்நாற்றம்

வற்றாப்பளை புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் புதுக்குடியிருப்பை அண்டிய பகுதி வீதி ஓரங்களில் கழிவுகள் போடப்பட்டுள்ளதால் அவ்வீதியால் செல்வோர் துர்நாற்றத்தினால் அவலப்படுவதுடன், கொட்டப்பட்ட இரும்புக் கழிவுகள் வீதியின் நடுப்பகுதிகளில் விசமிகளால் வீசப்பட்டு வீதியில் செல்லும் வாகனங்கள் மோட்டார் வண்டி, துவிச்சக்கர வண்டிகளின் ரயர்களில் குற்றி ரயர் காற்றுப்போய் அவலப்பட்டும் வருவதை அவதானிக்க முடிகின்றது. (ஆ)

## உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வும், உள்ளூராட்சி வாரமலர் நூல் வெளியீடும் எதிர்வரும் 13 ஆம் திகதியன்று கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையர் பொன் நித்தியானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி கிளி.மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டமும், பகல் 11.30 மணிக்கு விவசாயக் குழுக்கூட்டமும் நடைபெறவுள்ளதெனவும் அன்றைய தினம் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ, கு)

## கண்டெடுப்பு

வட்டக்கச்சி கட்சன் வீதிச்சந்தியில் 06.08.2004 அன்று தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. முருகேசு சிவப்பிரகாசம் (580092519V) புங்குடுதீவு இவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ் அடையாள அட்டையை ஈழநாதம் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். (12)

### தவறிவிட்டது

யோகநாதன் சரோஜினிதேவி 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு என்பவரது கைப்பேஸ் 06.08.2004 புதுக்குடியிருப்பு சந்தை சைக்கில் பாக்கில் தவறிவிட்டது. தே.அ.அ: 735944010v அத்துடன் 1பவுண் காப்பு, காசு1600/= உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை புதுக்குடியிருப்பில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் தகவல் யோ.சரோஜினிதேவி. (4896)

## முல்லை-வடக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் வலைஞன்மடம், முள்ளிவாய்க்கால்

### பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

**வயது எல்லை:-** 18-45 வயதுவரை, கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களுக்கு வயதெல்லை இல்லை.

மேற்படி 101/09 சம்பள குறியீட்டு இலக்கம் கொண்ட பொதுமுகாமையாளர் பதவிக்கு கீழ்த் தரப்பட்ட தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இவ்விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 2004.08.24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக தபால் உறையில் இடது பக்கத்தில் பொது முகாமையாளர்களுக்கான விண்ணப்பம் என தலைப்பிட்டு, தலைவர் முல்லை/வடக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம் , வலைஞன்மடம், முள்ளிவாய்க்கால் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொதுமுகாமையாளர் சம்பளத்திட்டம்:-** (101/09-6250-110X10-120X10-8550

இத்துடன் பொதுமுகாமையாளருக்கு பிறபடிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்:-** (அ) கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில்3வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது முகாமைத்துவ மட்ட அல்லது மேற்பார்வையாளர் மட்டப் பதவிகளான 11ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமைமட்டப் பதவியில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் வர்த்தக நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் 8 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**தலைவர்,**
**முல்லைவடக்கு,**
**பனைதென்னை வள.அ.கூ.சங்கம்,**
**வலைஞன்மடம்-முல்லைத்தீவு.**

(4677)

## சாவு அறிவித்தல்

### வரப்பிரகாசம் ஞானம்மா

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வரப்பிரகாசம் ஞானம்மா 08.08.2004 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வரப்பிரகாசத்தின் மனைவியும், சந்தியாகுப்பிள்ளை(ராசையா), காலஞ்சென்ற அருட்சகோதரி லெட்டீசியா, றோசம்மா, காலஞ்சென்ற ராசம்மா ஆகியோரின்அன்புச் சகோதரியும், செல்வராசா (அமெரிக்கா), தவராசா(தவம்), மேரிகொன்சப்சன் ஆகியோரின் தாயாரும், துரைராஜா (5ஆம் வாய்க்கால் பரந்தன் CO, ஓய்வு பெற்ற திட்ட முகாமையாளர், நிர்வாகஅலுவலர் KAROD), மேரிறோசலின் (அமெரிக்கா), மேரி கிறேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், விபீஸ் (லண்டன்), எமிலி, விஜந், பமிலா(அமெரிக்கா), பிறயன் (அமெரிக்கா), நிஷாந்,நிமலேஸ், றெனிற்றா, வினிற்றா ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார். அன்னாரது பூதவுடல் 11.08.2004 (புதன்கிழமை) கரவெட்டி சேமக்காலையில் முற்பகல் 10 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
ஆ.வி.துரைராஜா/CO
பரந்தன்

(4897)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்
# காவல்துறை அதிகாரிகள் 7 பேர் பலி

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் புறநகர்ப் பகுதி நகர் ஒன்றில் ஷியானோ மகானோ என்ற துணை ஆளுநரைக் குறிவைத்து தீவிர வாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் காவல்துறை உயர் அதிகாரிகள் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர்.**


வெடிமருந்து நிரப்பப்பட்ட காரின் மூலம் தற்கொலைப் படைப் போராளியொருவர் இத்தாக்கு தலை நடத்தியுள்ளார்.

இச்சம்பவம் பாக்தாத்திலிருந்து 70 கிலோ மீற்றர் வடகிழக்கில் அமைந்துள்ள பாலுக்கன் என்ற இடத்தில் நேற்றுக்காலை இடம் பெற்றது. ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அவரை ஆதரிக்கும் தீவிரவாதிகள் தொடர்த் தாக்குதலை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கெதிராக தீவிர வாதிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இது அமெரிக்காவிற்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் அமெரிக்க தலைமையிலான கூட்டணிப்படையினருக்கு உணவுப் பண்டங்கள் உள்ளிட்ட பாவனைப்பொருட்களை விநியோகித்து வரும் நிறுவனங்களின் பணியாளர்களை தீவிரவாதிகள் கடத்திச்சென்று, கூட்டணிப்படையினரிற்கான உணவு விநியோகத்திலும் பாரிய நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றனர். மூன்று இந்தியர்கள் உள்ளிட்ட ஏழு பேர் தற்போதும் தீவிரவாதிகளிடம் பணயக்கைதிகளாக உள்ளது தெரிந்ததே.

இந்நிலையில் ஈராக்கின் இடைக்கால அரசின் பிரதமர் இயாத் அல்லாவிஷியா முஸ்லிம்கள் மேற்கொண்டு வருகின்ற தாக்குதலைக் கட்டுப்படுத்தவென நஜாப்பிற்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். ஆயுதங்களை ஒப்படைக்குமாறும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.



கிழக்கு பாக்தாத்திற்கு அண்மையில் சதாத் நகரில் ஆர்.பி.ஜி யுடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள சியா முஸ்லிம் போராளி.

### கடன் வழங்க மறுப்பு

ஆர்ஜன்டீனாவின் பொருளாதார அபிவிருத்திக்கென சர்வதேச நாணய நிதியம் கடன் வசதிகளை வழங்கமாட்டாதென அறிவித்துள்ளது. இதனையடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி இல்லாமலேயே அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள ஆர்ஜன்டீனா தயாராகி வருகின்றது.



தெற்கு ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதலில் பற்றி எரியும் பிரித்தானிய இராணுவத்தின் லாண்ட்றோவர் வாகனம்.

# ஆட்களைக் கடத்துவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்

## -ஈராக் இடைக்கால அரசு அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் ஆட்களைக் கடத்தும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்கப்படுமென்று அந் நாட்டு இடைக் கால அரசு அறிவித்துள்ளது. அமெரிக்க ஆக்கிரமிப்பையடுத்து கடந்த சில மாதங்களாக ஈராக்கில் மரண தண்டனைக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் தற்போது இத்தண்டனை நடைமுறைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாகசாகி மீது அணுகுண்டு வீச்சு ஜப்பானில் நினைவு நிகழ்வு

(டோக்கியோ)

ஜப்பானின் நாகசாகி நகர் மீது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி அமெரிக்க விமானம் ஒன்று அணுகுண்டுத் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல் நடைபெற்று 59 ஆண்டுகள் நேற்று நிறைவடைந்தது. இதனையடுத்து தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன.

# கராச்சியில் 2 குண்டு வெடிப்புக்கள் எட்டுப் பேர் பலி, 50 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள முஸ்லிம் பாடசாலையருகே நேற்று முன்தினம் இடம் பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன் 50இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகமாயிருந்த வேளையே இக்குண்டு வெடித்துள்ளது. முதலாவது குண்டு துவிச்சக்கர வண்டி ஒன்றிலும், இரண்டாவது குண்டு உந்துருளியிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த தெனவும் தெரிவிக்கப்படும் அதேவேளை மேலும் ஒரு குண்டு சம்பவ இடத்தில் இருந்ததாகவும், ஆனால் அதனைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்ததாக கராச்சி நகர பொலிசார் தெரிவித்தனர். குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்திற்கு அருகில் இருந்த உணவு விடுதியும் பலத்த சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதே கராச்சி நகரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



இஸ்ரேலிய சிறைகளிலுள்ள தமது உறவினரது படங்களைத் தாங்கி மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலிற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தீனப் பெண்கள்.

# அமெ. ஹெலியை வீழ்த்திய பின் போராளிகள் குதூகலிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கருகே சியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வாழும் சதார் நகரில நேற்று முன்தினம் பறந்து சென்ற அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இதன் போது ஹெலிகொப்டரில் இருந்த தலைக்கவசம் உள்ளிட்ட பல பொருட்களை கைப்பற்றிய போராட்டக்காரர்கள் அவற்றினை துப்பாக்கி முனையில் ஏந்தியவாறு அங்குமிங்கும் கூச்சலிட்டுத் திரிந்தனர். இதனையடுத்து அமெரிக்க இராணுவ வாகனமொன்றும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.


### ஈரான் தூதரைக் கடத்தியதாக அறிவிப்பு

ஈரான் நாட்டு தூதரை கடத்தியிருப்பதாக ஈராக் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஈராக்கில் அல்ஹைதா தொடர்புடைய பல தீவிரவாதிகள் இயக்கம் செயற்பட்டு வருகின்றது. ஈராக்கில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறவேண்டுமென இந்த இயக்கங்கள் கோரி வருகின்றன. இதற்காக வெளிநாட்டவர்களைக் கடத்திச்சென்று பணயக் கைதிகளாக வைத்து மிரட்டுகிறார்கள். இந்த நிலையில் ஈரான் நாட்டுத் தூதரக மூத்த அதிகாரியை கடத்தி வைத்திருப்பதாக ஈராக் இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத இயக்கம் அறிவித்துள்ளது. இதற்கு ஆதாரமான வீடியோக்காட்சியை "அல்-அராபிய" டெலிவிசன் மூலம் ஒளி பரப்பியுள்ளனர். தாடியுடன் காட்சியளித்த அவர் தனது பெயரை பரிதூனிஜகானி என்று தெரிவித்தார். ஆனால் அவரது குரல் சரிவரக் கேட்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இத்தாலியின் றோம் நகரில் காவல் கடமையி லீடுபட்டுள்ள ஆயுதம் தாங்கிய பொலிசார்.



ஜப்பானின் புகுய் நகரில் அமைக்கப்பட்டுள்ள அணுசக்தி நிலையம். இந்த நிலையத்திலிருந்து அண்மையில் வாயுக்கசிவு ஏற்பட்டதால் நால்வர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்க ஏற்பாடு

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை விரைவுபடுத்துமாறு மன்னார் மாவட்ட அரசஅதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.**

மன்னார் மாவட்டத்தில் மின்சாரவசதிகள் அற்ற கிராமங்களான மாவிலுபட்டான் குடியிருப்பு, பெரிய பண்டிவிரிச்சான், உமனவி, கொவ்வங்குளம், கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப்பண்ணை, ஓலைத்தொடுவாய், புதுகமம் போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கு இந்நிதியாண்டில் மின்சாரம் வழங்குவதற்காக மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 88இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அ.அதிபர் வி.விஸ்வலிங்கம் மன்னார் மின்சாரசபை முகாமையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (மி)

# கணினிப் பயிற்சி நிலையம் மீளமைப்பும், பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கலும்

(புதுக்குடியிருப்பு)

லண்டன் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினரின் உதவியுடன் தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழ் தகவல்தொழில் நுட்ப ஒருங்கமைப்பும் ஒருங்கிணைந்து நடாத்தும்கணினிப்பயிற்சி நிலைய மீளமைப்பு விழாவும், மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பில் சிறப்பாக இடம்பெற்றன.

தமிழீழ மாணவர் அமைப்பின் நிர்வாகப்பொறுப்பாளர் முருகு பாரிமகன் தலைமையில் இது இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய வளவில் அமைந்துள்ள இந் நிலைய திறப்பு விழா நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசியக் கொடியை முல்லை.மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார். நிலையப் பெயர்ப் பலகையை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும் செயலாளர் சி.வேதவனமும் திரை நீக்கம் செய்து வைக்க நிலையத்தினை கள மருத்துவப் பொறுப்பாளர் மனோஜ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனையடுத்து அரங்க நிகழ்வில் வரவேற்புரையை அன்ரனி நிகழ்த்த, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் செயலாளர் உரையாற்ற, சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ. முகுந்தன் ஆற்றினார். தொடர்ந்து கணினிப் பயிற்சி முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர், களமருத்துவப் பொறுப்பாளர், புதுக்குடியிருப்பு மகாவித்தியால அதிபர் உள்ளிட்டோர் மாணவர்களுக்கான சான்றிதழை வழங்கிக் கௌரவித்தனர். (08)






# கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்வு

(முல்லை)

கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் 2004ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் உயர் மட்டக்குழுவினரால் மேற்பார்வை செய்யப்பட்டது.

இதில் வன்னிப் புனர்வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சின் நிதியிலிருந்து முல்லைத்தீவு பொதுச் சந்தை திருத்தம், நீராவிப்பிட்டி வீதி புனரமைப்பு மற்றும் மாகாண அமைச்சின் நிதியில் மணற்குடியிருப்பு 1 ஆம் குறுக்குத்தெரு வீதி, செல்வபுரம் கடற்கரை வீதி, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி முன் வீதி, செம்மலை பாடசாலை வீதி என்பனவற்றுடன் உலக உணவுத்திட்டத்தின் கீழ் இறால் குளம், தீர்த்தக்கரை வீதி முள்ளிவாய்க்கால், நாகதம்பிரான் வீதி,முள்ளியவளை செங்குந்தா வீதி 1ஆம் குறுக்குத்தெரு, உஷா வீதி, சுறுளிவீதி, கேப்பாபுலவு கோட்டை விநாயகர் வீதி, அளம்பில் மயான வீதி, செம்மலை 2ஆம் குறுக்குத்தெரு, செம்மலைப்பாடசாலை கடற்கரை வீதி என்பனவற்றுடன் குமுழமுனைச் சந்தையும் பார்வையிடப்பட்டது.

முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன்,முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி,கரைத்துறைப்பற்று பிரதேச சபை செயலாளர் ஆகியோரே பார்வையிட்டவர்கள் என்பதுடன் இதன் முனடனோற்றம், பின்னடைவுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஆ)(20)

## புனரமைக்க வேண்டுகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பழைய வட்டக்கச்சிப் பகுதியில் இருந்து முரசுமோட்டைக்குச் செல்லும் வீதி மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாதுள்ளது. இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பலத்த சிரமத்தினை எதிர்கொள்வதுடன், பல மைல்கள் பிரயாணம் செய்து புளியம்பொக்கணைச் சந்தியூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதுவிடயத்தில் உரிய கவனம் எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.(15)

# கண்ணகிபுரத்தில் இரவு வேளை நான்கு சூடுகள் தீவைத்து எரிப்பு

அக்கரைப்பற்று கண்ணகிபுரம் வயல் பிரதேசத்தில் நான்கு சூடுகள் இனம் தெரியாதவர்களால் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

கண்ணகிபுரம் 4ஐச் சேர்ந்த பூபாலபிள்ளை செல்வராசா என்பவர் 10ஏக்கர் நெற்காணியை 35 ஆயிரம் ரூபா குத்தகைக்கு எடுத்து, சிறுபோக வேளாண்மை செய்து, கடந்த வெள்ளிக்கிழமை 40 ஆயிரம் ரூபா கூலி கொடுத்து வேளாண்மை வெட்டி சூடு வைத்த 4 சூடுகளுமே தீக்கிரையானமை குறிப்பிடத்தக்கது.

வேளாண்மை விதைப்பு முதல் இதுவரை 2 இலட்சம் ரூபா செலவழித்துள்ளதாகவும், 4 சூட்டிலும் இருந்து 400 மூட்டை நெல் அறுவடை கிடைத்திருக்குமெனவும் செல்வராசா பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். பொலிசார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக எவருமே கைது செய்யப்படவில்லை.

# பெண்களின் உரிமைகள் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் பிரஜைகள் குழுவால் மனித உரிமைகள் தொடர்பாக பெண்களும் சமூகமும், பெண்களின் சட்ட உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 09 மணிக்கு மன்னார் புனித செபஸ்ரியார் தேவாலயத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை எஸ். எமிலியாநூஸ் பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நூற்றுக்கு மேலான இளைஞர்,யுவதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கருத்துரைகள் இடம்பெற்றன. அதன்பின் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. (மி)

# வர்த்தகர் சங்க விசேட பொதுக் கூட்டம்

முள்ளியவளைப்பிரதேச வர்த்தகர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி ஞானப்பிரகாசர் மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் க.தேவராசா தலைமையில் அகவணக்கத்துடன் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் வர்த்தகர் சங்க யாப்பு நடைமுறைகள் தொடர்பாகவும், வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதையடுத்து வர்த்தக சங்கத்தின் கட்டமைப்பு பற்றியும் வர்த்தகர்கள் வர்த்தகசங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும் எனவும் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும் சிறப்புக் கருத்துரையினை முல்லைத்தீவு மாவட்ட தொழிற்சங்க பொறுப்பாளர் இ.பிறையாளன் நிகழ்த்தினார். தொடர்ந்து கருத்துரையினை சங்க போசகர் க.ஜெயதீஸ்வரன் நிகழ்த்தியதையடுத்து சங்க செயலாளர் பா. நிசாந்தனின் நன்றியுரையுடன் இக்கூட்டம் நிறைவடைந்தது. மேற்படி கூட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை இதனை தொடந்து பி.ப.5.00 மணிக்கு முள்ளியவளை பிரதேச வெண்மை வாணிபச் சங்கக் கூட்டம் சங்கத் தலைவர் கிருஸ்ண பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. (ஆ)

# காவல்துறையினர் கிராம ரீதியில் மக்களைச் சந்தித்து கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத் தமிழீழ காவல் துறையினரால் அப்பிரதேசத்திற்குட்பட்ட சகல கிராமங்கள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி கருத்தரங்கில் குற்றத் தடுப்பு சம்பந்தமாகவும், வீதி ஒழுங்கு சம்பந்தமாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி கருத்தரங்குகளில் கருத்துரையினை முள்ளியவளை பிரதேச காவல்துறைப் பொறுப்பாளர் கை.கணேசமூர்த்தி நிகழ்த்தி வருகின்றார். கருத்தரங்குகளில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர்.

இதேவேளை மேற்படி காவல் துறையினரால் பிரதேசத்தில் இரவு நேர சுற்றுக்காவல், பதுங்கியிருந்து சுற்றுக்காவல் என இரவுவேளைக் காவல்கடமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இரவுவேளைகளில் திருடர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கருத்தரங்குகளில் கருத்துரை வழங்கிய மேற்படி துறைசார் பொறுப்பாளர் தெரிவிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களிடம் 1500ரூபா குற்றப்பணம் அறவிடுவதுடன் அவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (ஆ)

-நியமனப் புறக்கணிப்பை ஆட்சேபித்து இடம்பெற்ற-

# உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா மாணவர் போராட்டம் இடைநிறுத்தம்

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கத்தின் தலையீட்டையடுத்து, திருகோணமலையில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா பெற்ற மாணவர்கள் பட்டதாரி நியமனத்தின்போது தாங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து இரு தினங்களாக நடத்திய விரிவுரை பகிஷ்கரிப்பு கடந்த சனிக்கிழமை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

மாணவர்களின் விரிவுரை, பகிஷ்கரிப்புப் போராட்டம் திருமலை உயர்தொழில்நுட்ப நிறுவன வளவில் இடம்பெற்று வந்தது. சனிக்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் பங்குபற்றிய மாணவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சந்தித்துப் பேசினார். மாணவரின் நியாயமான கோரிக்கை குறித்து எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பில் நிதியமைச்சரைச் சந்தித்துப் பேசவிருப்பதாகவும், அப்பேச்சுவார்த்தை நடைபெறும்வரை விரிவுரைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஒத்தி வைக்கும்படியும் துரைரட்ணசிங்கம் மாணவரைக்கேட்டுக் கொண்டார்.

உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டம், பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது பட்டதாரிக்கு சமானமானது என்று அங்கீகரிக்கப்பட்டு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. 30.10.90 இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரி பட்டத்துக்குச் சமானமானது என்று கருதப்பட வேண்டும் என்று கூறுகிறது. இந் நிலையில் தற்போதைய அரசு தங்களை பட்டதாரி நியமனத்தின் போது புறக் கணித்தமை அநீதியானது என்று உயர் தேசியக்கண்க்கியல் டிப்ளோமா பட்டம் பெற்றவாகள் அறிவித்துள்ளனர். (25)

## வீதி புனரமைப்பின் தாமதத்தைப் போக்குக!

கொள்ளவிளாங்குளப் பகுதி வீதி திருத்துவதற்காகப் போடப்பட்டுள்ள மண் சீர்செய்யப்படாமல் இருப்பதால் பயணிகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதுடன், பேருந்துகள் அதனூடாகப் பயணம் செய்வதால் பேரபாயத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவ்வீதியைத் திருத்தும்வரை வேறொரு போக்குவரத்துப் பாதையை ஏற்படுத்தித் தருமாறு இது சம்பந்தப்பட்டவர்களை மக்கள் கவலையுடன் கேட்கின்றனர்.

# சிறிலங்காப்படைகளின் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருண்டு கிடக்கும் கிராமங்கள்

கைதடி நாவற்குழி ஒருபிரிவு உட்பட தனங்கிளப்பு மறவன்புலோ கிராமம் பரந்து விரிந்து கிடக்கும் வயல்வெளிகள் கொண்டது. பாலைவனமாய் இன்று காட்சியளிக்கும் இக்கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், ஏ-ஒன்பது பிரதான சாலை சந்திக்கும், கைதடி பாலத்திற்கு அருகில் இருந்து இடதுகைப்பக்கம் திரும்பும் இச்சாலை மனிதர்களின் சந்தடியின்றி அசைவற்றுக்கிடக்கிறது. ஐந்து கிலோ மீற்றர் படைமுகாம்கள், காப்பரண்கள் என நீளும் இப்பகுதிகளைக் கடந்து ஊரின் எல்லைகளும், வீடுகளும்தென்படும். கிராம அலுவலர் பிரிவு ஜெ.297, ஜெ.298, ஜெ.299 மூன்று பிரிவுகளைக்கொண்ட இப்பகுதியில் அறுநூறு குடும்பங்கள் வாழ்ந்தனர். இப்பகுதிகள் இன்று களை இழந்து காணப்படுகின்றது. இந்த மூன்று கிராம அலுவலர் பிரிவில் 6500 ஏக்கர் நிலப்பரப்பில் இன்று 4500 ஏக்கர் நிலப்பரப்பு சிறிலங்கா இராணுவத்தின் பாரியதொடர் படைமுகாம்களாய் நீண்டு செல்கிறது. இதற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலிகளால் ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் தடுப்பு வேலிகளுக்குள் ஆட்கொள்ளப்பட்ட பிரதேசமாக இருக்கிறது. பல வீடுகள், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் அறுபது கோயில்கள் இப்பாதுகாப்பு வலயப்பிரதேசத்தில் சிக்கி இருக்கின்றன. இப்பகுதி மக்களின் விவசாய தொழில்களும் மீன்பிடித் தொழிலும் முற்றாய் நசுக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பிட்ட சில கடல் துண்டுப்பிரதேசங்களில் மட்டுமே மீன்பிடித் தொழிலைச் செய்யும் நிலைக்கும், சிறுகுறிப்பிட்ட நிலப்பகுதிகளிலேயே விவசாய வேலையைச் செய்யும் நிலைக்கும் இப்பகுதி மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர். குறிப்பாக வயல் வெளிகளில் ஆங்காங்கே காணப்படும் அபாய எச்சரிக்கைப் பலகைகள், விடுவிகப்புட்டதாகக் கூறப்படும் சில ஏக்கர் விவசாயக் காணிகள் நிலக்கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அச்சுறுத்தல் இருந்து வருவதால் உழவுத்தொழிலை மேற்கொள்வதற்கு இங்குள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். அதைப்போலவே கடற்கரையிலும், கடலுக்குள்ளேயும் படையினரால் வைக்கப்பட்டுள்ள முட்கம்பிகள், மிதிவெடிகள் என கடற்கரை பிரதேசம் பாமர மீனவர்களின் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இது இப்பகுதி மீனவர்களுக்கு சவாலாகவே இருந்து வருகிறது. இதற்காக இப்பகுதி மக்கள் பல போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டும் எதிர்பார்த்த பலனை அடையமுடியவில்லை. கடந்த பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இப்பகுதியைச் சேர்ந்த செ.ஆனந்தரஞ்சன் என்பவர் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். மக்களின் மீளக்குடியேற்றம் பாடசாலைகள், கோயில்களில் இருந்து சிறிலங்காப்படைகள் வெளியேறி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிவிடக்கோரி இவர் மேற்கொண்ட மக்கள் போராட்டத்தில் அன்றைய சூழலில் மக்கள் எழுச்சியை காணக்கூடியதாக இருந்தது. தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உணர்வு பூர்வ நிகழ்வாக இப்போராட்டம் அன்று அமைந்தது .அன்றைய சூழலில் இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏராளம். இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இச் சாகும் வரையிலான உணணாவிரதப்போராட்டம் அரச தரப்பு பிரதிநிதியாக வந்த கலாநிதி ஏ.எஸ். குணசிங்கம் மற்றும் அரசாங்க அதிபர் சார்பில் வந்த திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை ஆகியோரின் உறுதிமொழிகளை அடுத்தே கைவிடப்பட்டது. அதைப்போல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளும் கவனத்தில் எடுக்கப்பட்டது.

ஆனால் அளித்த உறுதிமொழிகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. படைத்தரப்போ இறுக்கமான போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது. கடந்த மாசிமாதம் மகாசிவராத்திரி அன்று பூசைக்கு அனுமதிக்கப்பட்ட கைதடி நாவற்குழி குருகமூர்த்தி ஆலயத்திற்கு பூசகரும் உரிமையாளரும் தவிர வேறு எவரும் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

அதைப்போல் கைதடி நாவற்குழி தெற்குப் பகுதி மீனவர் நலன்கருதி உடனே திறக்கப்படும் என்ற கடற்பாதை இதுவரை படைத்தரப்பால் திறக்கப்படவில்லை. இதைப்போலவே இடம்பெயர்ந்த மக்களின் இருபத்தையாயிரம் கால்நடைகள் படையினரின் பாதுகாப்பு வலையப் பகுதிகளில் சென்று தங்கிவிடுகின்றன. இதை இப்பகுதியில் உள்ள சமூக விரோதிகள் சாதகமாகப்பயன்படுத்தி இராணுவத்துடன் இணைந்து இங்குள்ள கால்நடைகளை இரவு வேளைகளில் அபகரித்து இறைச்சியாக்கி வெளியிடங்களில் விற்று வருகிறார்கள். இதனால் இப்பகுதி மக்களின் கால்நடைகள் நாளுக்கு நாள் அருகி வருகின்றன

கோவிலாக்கண்டி தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் இருபதுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களிலும் லொறிகளிலும் மண்கடத்தல் தொடர்கிறது. இது பொலிஸ் மற்றும் இராணுவத்தின் துணையுடன் நடந்துவருவதாக மக்கள் உறுதியாக தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இப்பகுதியில் உள்ள ஆலய வளவொன்றில் இருந்து மண்ஏற்றியவர்களை பிடிப்பதற்கு இப்பகுதி மக்களால் சாவகச்சேரி பொலிசின் உதவி நாடப்பட்ட போது பொலிசார் உதவ மறுத்துவிட்டனர். இதன்மூலம் சட்டவிரோத மண்கடத்தலுக்கு பொலிசாரும், இராணுவமும் உதவிவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

12.02.1999 இல் இப்பகுதியை இராணுவம் முற்றாக ஆக்கிரமித்த பின் இப்பகுதியில் இயங்கிவந்த பதினைந்து வர்த்தக நிலையங்களும் மற்றும் முன்று கூட்டுறவுக் கடைகளும் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. இப்பொருட்கள் இன்றும் கோவிலாக்கண்டி சந்தியில் உள்ள இராணுவத்தினருக்கான கடையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன எனத் தெரிய வருகின்றது. ரயர், ரீயூப், வாளி, தும்புத்தடி, சவற்காரக்கட்டிகள், பவுடர்முதலியன இவற்றில் அடங்கும் இவற்றுக்கெல்லாம் தீர்வுகாணப்படவேண்டும் என்றால் குடாநாட்டிலிருந்தே முற்றுமுழுதாக சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகள் வெளியேற வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். இருண்டுபோயுள்ள இக்கிராமங்கள் ஒளி பெறவேண்டுமென்றால் ஒப்பந்த நடைமுறைகளை அரசு உடன் அமுற்படுத்த வேண்டும். காடுகளால் புதர்மண்டிப் போயுள்ள இப்பகுதியின் வயல்வெளிகள் புதுப்பொலிவு பெறவேண்டுமென்றால் சப்பாத்துக்கால்களின் சர்வாதிகாரம் அகற்றப்படவேண்டும். என்பதே இப்பகுதியில் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழும் தமிழர்களின் எண்ணமும் அவாவுமாகும். இப்படித்தான் சுதந்திரம்என்பது அடுத்தவன் சொத்தாக இருக்கின்றவரை எம்முடைய சுதந்திரம் என்பது கோள்விக்குறிதான். கடந்தமாதம் படைத்தரப்பால் இரண்டு சதுர கிலோமீற்றர் வயல்நிலங்களே விடுவிக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள பிரதேசம், வயல்நிலங்கள், தென்னந்தோட்டங்கள்,விவசாயக்காணிகள் இவற்றையெல்லாம் படைத்தரப்பு விட்டு வெளியேறுவது எப்போது? உறைந்து போன நினைவுகளுடன் உதிக்கும் சூரியனைக் காணநினைக்கும் நெஞ்சங்களின் நினைவு இதுவே!

**ம.ஆன்சிலின்**

## நீலங் காட்டில் மீளக் குடியேறிய மக்களின் காணிகளை விட்டுக் கொடுக்க கடற்படை மறுப்பு

### -அடிப்படைவசதிகளின்றியும் மக்கள் அவதி

(தீவகம்)

காரைநகரில் உள்ள நீலங்காட்டு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் பெரும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

1990களில் இப் பகுதிகளை படையினர் ஆக்கிரமித்ததனால் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து அங்கு மீளக்குடியேறியுள்ளனர். எனினும் மீளக்குடியமரச் சென்றுள்ள மக்கள் குடியேறுவதற்குரிய வகையில் படையினர் எதுவித விட்டுக் கொடுப்புகளையும் செய்யாததுடன் தமது பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் புதைத்து வைத்துள்ள மிதிவெடிகளையும் அகற்றுவதற்கு அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதனால் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாத இப்பகுதி மக்கள் விடுவிக்கப்பட்ட குறுகிய நிலப்பரப்பிலேயே தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சீரான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளைச் செய்து கொடுக்க யாரும் முன்வராததனால் இங்கு குடியமர்ந்துள்ள 150 குடும்பங்களைச் சேர்ந்த 650 இற்கும் அதிகமானோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொற்று நோய்களும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (33)

## மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66ஆவது பிறந்ததின நினைவுநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் மத்திய குழு உறுப்பினர்கள், செயற்குழு மற்றும் ஆசியக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலவரங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளனர். (33)

## கூழாவடி இராணுவ முகாம் படையினர் தொடர்ந்து விசேட பயிற்சியில்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கூழாவடி இராணுவ முகாமில் நிலை கொண்டுள்ள படையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள மேற்படி முகாமில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் பயிற்சி நடவடிக்கைகளின் போது சுமார் 500 வரையிலான படையினர் கூட்டுப் பயிற்சி மற்றும் கலகமடக்கும் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இப்பயிற்சிகளுக்காக படையினரால் நடாத்தப்பட்டு வரும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தால் அப்பகுதிகளில் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறு பயிற்சிகள் இடம் பெறும் காலை மற்றும் மாலை வேளைகளில் இம்முகாமின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## உழவு மாட்டைத் திருடி வெட்டிய குழுவினர் கலாசாரத்தைப் பேணும் குழுவிடம் சிக்கினர்

மேய்ச்சலிற்காக விடப்பட்டிருந்த உழவு மாடொன்றைத் திருடி, இறைச்சிக்காக வெட்டிய கும்பலொன்று கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் அகப்பட்டுள்ளது. பிடிபட்டவர்களில் இருவர் அண்மையில் கப்புதூ பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக தேடப்பட்டு வரும் சந்தேக நபர்கள் எனவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், கப்புதூ வயல் பகுதியில் மேய்ச்சலிற்கு விடப்பட்ட உழவு மாட்டைத் திருடிய இக்கும்பல் அதனை கரவெட்டி வெல்லன் பகுதியில் வைத்து வெட்டியுள்ளனர். பின்னர் இறைச்சியினை உரப்பைகளில் மூடிக் கட்டி ஓட்டோ மூலம் வல்வெட்டிப் பகுதியில் உள்ள நபர் ஒருவருக்கு விற்றுள்ளனர்.

சுமார் 17 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ்வுழவுமாடு திருடப்பட்டதாகக் கிடைத்த புகாரொன்றின் அடிப்படையில் கரவெட்டி தேசிய எழுச்சிப்பேரவையினர், கலாசாரத்தைப்பேணும் இளையோர் குழுவுடன் தேடுதல் நடாத்திய வேளையிலேயே வல்வெட்டிப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது.அத்துடன் சந்தேக நபர்களும் சிக்கியுள்ளனர். (27)

## தீவகக் கோட்ட தே.எ. பேரவையின் ஒன்று கூடல் நிகழ்வு 16ஆம் திகதி

யாழ். தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினருக்கான ஒன்று கூடல் நிகழ்வு ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணியளவில் அல்லைப்பிட்டி பராசக்தி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வேலணைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரது ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இவ் ஒன்று கூடலில் தீவகப் பிரதேச வாழ். மக்கள் எதிர் கொள்ளும் இராணுவக் கெடுபிடிகள் மற்றும் அதற்கான பரிகார நடவடிக்கைகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளன. இதில் யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பலரும கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். (33)

## பாஷையூர் சந்தைக்குச் செல்வோர் மீது படையினரின் கெடுபிடி அதிகரிப்பு

### மக்களும் வியாபாரிகளும் விசனம்


(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மீன் சந்தைக்குச் செல்வோர் மீது படையினர் பலவித சோதனைக் கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருவதாக விசனம்தெரிவிக்கப்படுகின்றது.

பாஷையூர் பகுதியில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக மேற்படி சந்தை காணப்படுகிறது. இதனால் மேற்படி பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினரின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே படையினர் இக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது இச்சந்தைக்கு செல்வோர் மீது சோதனை மற்றும் விசாரணைகளை மேற்கொண்ட பின் சந்தைக்குள் பிரவேசிக்க அனுமதிப்பதுடன் மொத்தமாக கடலுணவுகளை வியாபாரத்திற்காக வியாபாரிகள் எடுத்துச்செலலும் அவ்வுணவுகளை கொட்டிக் கிளறிச் சேதப்படுத்துவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக மக்களும். வியாபாரிகளும் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# ஜே.வி.பி யை ஓரம்தள்ளி பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமா?



இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது இயலாத காரியம், அல்லது இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் தொடங்கப்படுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற அறிவிப்பு கடந்த வார நடுப்பகுதியில் சந்திரிகாவின் பெயரால் ஜே.வி.பி.யால் விடுக்கப்பட்டிருந்தது. இதனால் பேச்சு வார்த்தைக்கான பேச்சுக்கள் தொடங்கப்படும் என இருந்த மிச்ச சொச்ச நம்பிக்கைகளும் மக்கள் மத்தியிலே இருந்து அகன்று போயின. அதாவது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேஷன் சென்ற மாதம் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு புலிகளுடனும் அரசுடனும் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். இவரது வருகை தேங்கிக் கிடந்த சமாதானத்தை ஒரு நகர்வுக்கு இட்டுச் செல்லும் என புத்திஜீவிகளாலும் நாட்டு மக்களாலும் பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டாலும், இறுதியில் அவரது வருகை • எதுவிதமான சமாதான நகர்வுகளுக்கும், இட்டுச் செல்ல முடியாமல்







ஏமாற்றத்தையே தந்ததாக இருந்தது.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு தொடர்பான தமது தெளிவான நிலைப்பாட்டை பலமுறை தெரிவித்திருந்தாலும். இறுதியாக வருகை தந்திருந்த ஹெல் கேஷனிடமும் மீண்டும் அதனையே வலியுறுத்தி இருந்தனர். எனினும் இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்க அரசு ஆயத்தமாக இருக்கிறது என சந்திரிகாவினால் அறிவிப்பு விட்டப்பட்ட தன் மறுகணமே ஜே.வி.பி. தனது மிரட்டலை விட்டிருந்தது. அதாவது இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் சனாதிபதி பேச்சை ஆரம்பிப்பாராக இருந்தால், தமது கட்சி உடனேயே வெளியேறும் என ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்திருந்தார். இதனால் ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் தமது கட்சி ஆட்சியில் இருந்த பயபீதியும் சந்திரிகாவினால் விடப்பட்ட இவ்வறிவிப்புக்குக் காரணமாக இருந்தது.

ஆனாலும் சந்திரிகாவின் அறிவிப்பையும் அவர் விடும் அறிக்கைகளையும் பொறுத்த வரையில் உறுதியானது என்று ஒன்றும் இல்லை, நிலையானது என்றும் ஒன்றும் இல்லை. நேரத்துக்கு ஒன்றும் தருணத்திற்கு ஒன்றுமாக வாக்கை அளிப்பதும், அதனைப் புரட்டுவதும் அவருக்கேயுரிய பாணியாகும்.

இதற்கு உதாரணப்படுத்தும் நிகழ்வாக அவர் பின்பு விடுத்த அறிக்கையும் செயல் மாற்றமும் மக்கள் மனங்களைக் குழம்ப வைத்திருக்கும், அதாவது இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச முடியும், அதேசமயம் இறுதித் தீர்வையும் மையமாக வைத்து இடைக்கால பேச்சுக்களை நகர்த்த முடியும், இதற்கு புலிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டும் என அறிவிப்பை விடுத்திருந்தார். இந்த நிலைமைகள் ஒரு புறமிருக்க சந்திரிகா தமது கூட்டணிக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து இராஜினாமாச்செய்த நிகழ்வும்திரும்பவும் நாட்டு மக்களைக் குழப்புவதும் கேள்விகளை உருவாக்குவதுமாக அமைந்துவிட்டது. வெளிப்படையாக இவர் கூறிய வேலைப் பழு என்பது அரசியல் தெரிந்த எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது ஆகும். அதாவது ஐக்கிய தேசியக் கட்சியி னரின் கடந்த ஆண்டு கால அரசாங்கத்தில் இருந்த 3 முக்கிய அமைச்சுக்களைப்பற்றித் தெரிந்து வைத்திருந்த சந்திரிகா அத்துடன் இணைந்த சகல திணைக்களங்களையும் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தார். தனக்கு விருப்பமானால் சகல அமைச்சுக்களையும் கூட பொறுப்பெடுத்து நிர்வகிக்க முடியுமென்று மிரட்டலுடன் கூடிய அறிவிப்பையும் விட்டிருந்தார். இந்த நிலையிலே வேலைப்பழு என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆனால் அரசியலிலேயே பல திருப்பங்கள் நிகழ வாய்ப்புக்கள் உள்ளன என்பது மட்டும் அனைவராலும் ஊகித்துக் கொள்ளக் கூடிய ஒன்றாகவே இருக்கின்றது. இன்று சனாதிபதியினால் சமாதானத்தை ஆரம்பிக்க முடியாது இருக்கின்ற நிலைமைக்கும், சர்வதேச சமூகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்ற நிலைக்கும் ஒரே காரணம் அவரது அரசிலே பங்களித்தோழர்களாக இருக்கின்ற ஜே.வி.பியினரே. அதாவது யதார்த்தத்திற்குப் புறம்பான வறட்டுக் கொள்கையையுடைய ஜே.வி.பியினரின் போக்கானது இந்த நாட்டையும் மக்களையும், மீண்டுமொரு யுத்தத்திற்கு இட்டுச் செல்வதற்கும் சமாதானக் கதவுகளை இறுக அடைப்பதற்கும்தான்வழி வகுக்கும். இந்த நிலைமையை சந்திரிகா எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார். என்பதே இன்றுள்ள கேள்வியாகும். இதற்கேற்றாற் போன்றே அவரது தலைமைப் பதவியில் இருந்து விலகியமைக்கான காரணமாகக் கொள்ளப்படுகின்றது.

நிச்சயமாக சந்திரிகாவுக்கு ஒன்று தெரிந்திருக்க வேண்டும். அதாவது ஜே.வி.பியினரின் மிரட்டல்களுக்கும், கோரிக்கைகளுக்கும் பணிந்து கொண்டும், இறங்கிப் போய்க்கொண்டும் இருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வாய்ப்பும் இல்லை முன்னேற்றத்திற்கான வழிகளும் இல்லை என்பதேயாகும். இதனை நன்கு உணர்ந்தவராகவே அவர் இந்தப் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். இதனை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்கும் போது இனிவரும் அரசியல் நிகழ்வுகள் மிக முக்கியமானவையாக இருக்கப்போகின்றன என்றும் சமாதானப் பேச்சுக்களைச் செய்வதற்கு சந்திரிகா சில துணிகரமான முடிவுகளை எடுக்கவுள்ளளார் என்றும் இதற்காகவே தனது ஐ.ம.சு முன்னணியின் தலைமைப் பதவியையும் இராஜினாமாச் செய்துள்ளார் என்றும் கூறியுள்ளார்.

ஏனெனில் சமாதானப் பேச்சுக்களை இடைக்கால நிர்வாகசபையின அடிப்படையில் ஆரம்பிக்க முடியாது என்று கூறிய நிலையிலேயே நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களும் தாம் தற்காலிகமாக நடுநிலைமைகளில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்ததும் சந்திரிகாவுக்கு நிச்சயமாக சாதகமான சமிக்ஞைககளாக இருந்திருக்கமாட்டாது. அத்துடன் அமெரிக்கத் தூதுவரால் முன்னர் அறிவிக்கப்பட்ட செய்தியில் இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்காது விட்டால் அமெரிக்காவின் பார்வை வேறுபக்கம் திரும்பிவிடும். என்பதும் இங்கு சாதகமான நிலைமைகளை அடியோடு அற்றுப்போகச் செய்வதாகவே இருக்கும். எனவே தான் இந்த கூட்டுக் கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து விலகுவதன் மூலம் தக்கதருணம் வரும்போது அதாவது நிலைமைகள் இறுக்கமான கட்டங்களை அடைகின்ற போது ஜே.வி.பியினரை உதறித்தள்ளிவிட்டு தனது பதவியையும், அரசாங்கத்தையும் காப்பாற்றியாக வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் தோன்றியுள்ளது. மறுவளமாக தமது அரசியலின் காலம் முடியும் தறுவாயில் அடுத்து ஒரு அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சியை உருவாக்கி அதன் மூலம் தமது பதவி ஆசைகளை அனுபவிக்கவும் அவர் பல திட்டங்களை வகுத்துவருவதாகத் தெரியவருகின்றது. இதற்கெல்லாம் முன்பு சமாதானத்தை தக்கவைத்தேயாக வேண்டும். இதற்காக அவர் மீண்டும் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை விரைவிலே சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து வருவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. இது சாத்தியமாகுமா என்பது ஒரு புறமிருக்க சமாதானத்தை பேச்சுவார்த்தை மேசைகளின் நகர்வுகளுக்கு இட்டுச் செல்வதற்கான ஆயத்தநிலையில் உள்ளாரா? என்பதே இன்றுள்ள பிரதான கேள்வியாகும். அதாவது ஜே.வி.பியின் நடவடிக்கைகளை அவர் புறந்தள்ளத் தயாராக உள்ளாரா அப்படியானால் எவ்வாறு அவரது அரசைத் தக்கவைத்துக்கொண்டு ஜே.வி.பியையும் புறந்தள்ள முடியும்? இதற்குள்ள சாத்தியப்பாடான வழியாக ஐ.தே.கட்சியின் ஆதரவைப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில் பிந்தியசெய்திகளின் படி நோர்வேயை மீண்டும் சமாதானப் பேச்சுக்களை தொடங்குமாறு அழைப்பு விடுத்துள்ளமையானது அவர் ஏதோவொன்றுக்குத் தயாராகிவிட்டார் என்பதையே புலப்படுத்துகின்றது.

இன்று ஜே.வி.பியின ருக்குள்ளேயும் ஒருமித்த தெளிவான கொள்கையில்லாத நிலைமையே காணப்படுகிறது. அதாவது அண்மையிலேயே இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு விட்டுக்கொடுப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்து இறுதித்தீர்வை நோக்கி நகர்த்திச் செல்ல முடியும் என்று ஜே.வி.பியினர் அமைச்சர் அநுரதிஸ நாயக்க கருத்துக் கூறினார். ஆனால் அதேகட்சியைச் சேர்ந்த இராமலிங்கம் சந்திரசேகரன் கருத்து வெளியிடும் போது இடைக்கால நிர்வாகம் என்பது தனிநாட்டுக்கான ஆயத்தம். இந்த நிலைப்பாட்டிற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்காது என கருத்து வெளியிட்டார். இந்த முரண்பாடு கூட்டணிகட்சிகளையே பிரித்து விடக் கூடிய நிலையை உண்டு பண்ணி விடவும் முயலலாம் என்பதை உணர்ந்துள்ளாரா சந்திரிகா? இதனை விட மீண்டும் பாராளுமன்றைக் கலைத்து புதியதேர்தல் ஒன்று வைப்பதற்கான கதைகளும் எழும்ப ஆரம்பிக்கின்றன. அது எப்படியானாலும் தற்போதைய நிலைமையானது நாட்டின் அமைதியை முற்றுமுழுவதுமாக சீர்குலைத்து விடக்கூடிய நிலைமையிலேயே காணப்படுகிறது. ஏனெனில் இரகசியப் படுகொலைகளும் ஆட்கடத்தல்களும் மர்மக் குண்டுவெடிப்புக்களும் இதற்கான முஸ்தீபுகளை ஏற்படுத் துவதாகவே இருக்கின்றன. சந்திரிகா -ஜே.வி.பி உறவு என்பது இனிவரும் காலங்களில் கசப்பையும் கடுகடுப்பையும் ஏற்படுத்துபவையாக இருக்குமா? அப்படியாயின் அரசியலிலே திடீர் திருப்புமுனைகள் ஏற்படவாய்ப்புக்கள் இருக்கும் என்பதும் உண்மை.

**ஸ்ரீபன்**

## சைவநெறி போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்றோருக்கு பரிசு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினால் கிளி.மாவட்ட பாடசாலை ஆறாந்தர மாணவர்களுக்கு நடாத்தப்பெற்ற இடைக்கால சைவ நெறிபோட்டிப்பரீட்சை2004 சிறப்புப் புள்ளிபெற்ற மாணவர்களுக்கும் மற்றும் கழக அறநெறி வகுப்பில் அரசினால் நடாத்தப் பெற்ற பரீட்சையில் சித்தியடைந்தோர்க்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பெற்றது.

மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியா லயத்தில் திருநெறிக்கழகத் தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், கரைச்சி பிரதேச்செயலர் பொன்நித்தியானந்தம், மகாதேவா ஆச்சிரமம் தவத்திருகணேசானந்த சுவாமிகள், கழக இணைச்செயலர் திருமதி செ.சோமசேகரம்பிள்ளை மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இடைக்கால சைவநெறிப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற கிளி.சென்திரேசா மகளிர் கல்லூரியை சேர்ந்த வைஸணவிக்கு இந்நிகழ்வில் வைத்து கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவித்தார். (சோ,கு)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா

திருகோணமலையில் கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்டமுன்பள்ளிக் கண்காட்சியை பார்க்கும் நோக்குடனும்முன் பள்ளிக்கல்வியை மேம்படுத்தும் நோக்குடனுமான முல்லை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலா கடந்த 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இச்சுற்றுலாவில் விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த 76 முன்பள்ளி அசிரியர்கள் கலந்து கொண்டு திருமலை, அனுராதபுரம்,வவுனியா ஆகிய மாவட்டங்களை பார்வையிட்டு திரும்பியதாக முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய முல்லை மாவட்ட இணைப்பாளர் செல்வி கலைவாணி தெரிவித்தார். (20)





# ஒலிம்பிக்கின் கதை ஒரு சுவாரசியமான தகவல்

எதென்சில் ஆரம்பமாகவுள்ள 2004 ஒலிம்பிக் போட்டிகளுக்கு இன்னமும் நான்கு நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அதன் வரலாறு பற்றி அறிந்து கொள்வோம்.

ஒலிம்பிக் ...உலக விளையாட்டு வீரர்களின் கனவு இது. பதக்கம் பெறுவதை விட, பங்கேற்பதே மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படும் களம். நவீனகால விளையாட்டுக்களில் பணம்..பணம்.. மேலும் பணம் என்று கொட்டுகிறது ஆனாலும், அதிலெல்லாம் இல்லாத சிறப்பு ஒலிம்பிக்கில் இருக்கிறது. ஒலிம்பிக் வீரர் என தனது பெயரும் உச்சரிக்கப்பட வேண்டும் என்பது ஒவ்வொரு விளையாட்டு வீரனதும் இரகசியக் கனவாகக், கண் டிப்பாக இருக்கும்.

கிரேக்க நாட்டில் பிறந்து... உலகெங்கும் சுற்றி வளர்ந்து மீண்டும் இப்போது பிறந்த மண்ணுக்குத் திரும்பியிருப்பதால்... வரும் 13 ஆம் திகதி துவங்கும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள், வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன. மற்ற எந்த விளையாட்டுக்கும் இல்லாத பாரம்பரியச்சிறப்பு ஒலிம்பிக்கிற்கு மட்டுமே உண்டு. ஆம்! பல ஆயிரம் ஆண்டு நீண்ட, நெடிய பாரம்பரியம், உலக வரலாற்றில் இந்த ஒரு விளையாட்டுப் போட்டிக்கு மட்டுமே உண்டு. ஒலிம்பிக் போட்டிகள் பிறந்தகதையை.. அந்த கிரேக்க மண்ணுக்கே பயணம்செய்து தெரிந்து கொள்ளலாம்.. வாருங்கள்!



## கிரேக்க சாம்ராஜ்யம்

ஐரோப்பியக் கண்டத்தில் இருக்கும் ஒரு சின்னஞ்சிறு குட்டி தேசம் கிரீஸ். ஒருகாலத்தில் கிரேக்க பேரரசர்கள் கொடிகட்டி ஆண்ட மண் இது. கலாசாரம், தத்துவம் உட்பட பல்வேறு அரிய கண்டு பிடிப்புக்களை உலகிற்குத் தந்த பூமி. உலக பேரரசர்கள் பலர் தடம் பதித்துச் சென்ற மண் இது. வரலாற்றுப் பாரம் பரியம் நிறைந்த இக் கிரேக்க மண்ணில்தான் ஒலிம்பிக் பிறந்தது.

ஒலிம்பிக் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் முன் கிரேக்க கலாசாரம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பண்டைக்கால (கிறிஸ்து பிறப்பதற்கு முன்) கிரேக்கர்கள் நிறைய மதச் சடங்குகள் (திரு விழாக்கள்) கொண்டாடுவார்கள். அவர்களுக்கு ஒரு பழக்கம். தடகளப் போட்டிகள் இன்றி கொண்டாடினால் அந்த மதச் சடங்கு பூர்த்தியான முழுத்திருப்பதி அவர்களுக்கு கிடைக்காது. ஆகவே எந்தத்திருவிழா என்றாலும் கட்டாயம் விளையாட்டுப் போட்டிகள் இருக்கும்.

## கடவுளுக்கெல்லாம் கடவுள்

கிரேக்க மக்கள் அப்போது நான்கு முக்கிய தேசிய விழாக்களைக் கொண்டாடினார்கள். அவை இஸ்த்மியன், நெமியன், ஒலிம்பிக் மற்றும் பைதீன். இதில் மற்ற மூன்றையும் விட ஒலிம்பிக் விழாவுக்கு மதிப்பு அதிகம். காரணம் கிரேக்க கடவுள்களுக்கெல்லாம் கடவுளாகக் கருதப்படும் ஜீயஸ் புகழ்பரப்பும் விழா இது. ஆகவே கிரேக்கர்கள் வாழ்வில் ஒலிம்பிக் முக்கிய இடம் பிடித்தது. கிரேக்க நாட்டின் தென்பகுதியிலுள்ள ஒலிம்பியா நகரில் இந்த விழா நடக்கும். உலகின் முதல் ஒலிம்பிக் போட்டி இங்கு கி.மு.(கிறிஸ்து பிறப்பதற்கு முன்) 776 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது.

## சண்டைநிறுத்த ஒப்பந்தம்.

மன்னர்கள் ஆட்சிக்காலம் என்றாலே தவிர்க்கமுடியாத ஒரு விஷயம் போர். கிரேக்க நகரங்களுக்கிடையே அந்தக்காலத்தில் அடிக்கடி நடக்கும். (நமது வரலாற்றில், குறுநில மன்னர்கள் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டது போல) ஒரு நகரத்தின்மீது மற்றொரு நகரம் படையெடுப்பதும், சண்டைபிடிப்பதும் சாதாரணம் ஒலிம்பிக் போட்டி நடந்து கொண்டிருக்கும் போதும் இப்படி படையெடுத்து வந்தால்...? அது நன்றாக இருக்காதே! ஆகவே ஒலிம்பிக் போட்டிகள் துவங்கும் முன்னதாக, கிரேக்க நகரங்களுக்கு இடையே ஒரு சண்டை நிறுத்த ஒப்பந்தம் அவசர, அவசரமாக அமுலுக்கு வரும்.

போட்டிகள் துவங்கி முடியும் வரை, யாரும் யார் மீதும் படையெடுக்கவோ, சண்டை பிடிக்கவோ கூடாது. மீறி யாராவது படையெடுத்தால்...? அந்த நகரத்திற்கு மற்ற நகரங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மிகக்கடுமையான அபராதம் விதிக்கும்.



அதுதவிர ஒலிம்பிக்கில் பங்கேற்க அந்த நகரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதி மறுக்கவும் படும். இப்படித்தான் துவங்கியது. ஒலிம்பிக் போட்டிகள்.

## ஆடை அணியக்கூடாது

சரி. ஆரம்பகாலங்களில் நடந்த ஒலிம்பிக் போட்டிகள் பற்றிக் கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

* போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் ஆடையில்லாமல்-நிர்வாணமாக-மட்டுமே பங்கேற்க வேண்டும். வெறுங்காலுடன்தான் போட்டியில் ஓடவேண்டும்.

*கிரேக்கர்களுக்கு மட்டுமே போட்டிகளில் பங்கேற்க அனுமதி. மற்ற நாட்டைச் சேர்ந்தவர்கள், பெண்கள், அடிமைகள் ஆகியோருக்கு போட்டிகளில் பங்கேற்க அனுமதி இல்லை.

*பிற்காலத்தில், ரோமானியர்கள் மட்டும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.. போட்டிகளில் பங்கேற்க மட்டுமல்ல... பார்க்கக்கூட பெண்களுக்கு அனுமதி இல்லை. அப்படி யாராவது பார்த்தது தெரிந்தால் முடிந்தது கதை. அந்தப் பெண்களுக்கு ஒரே தண்டனை-மரண தண்டனை.

## ரோமானியப் படையெடுப்பு

சீரும் சிறப்புமாக நான்காண்டுகளுக்கு ஒருமுறை கிரேக்கர்களால் கொண்டாடப்பட்ட ஒலிம்பிக் போட்டிகளுக்கு ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் வடிவில் வந்தது வினை. ரோமானியர்கள் படையெடுப்புக்குப் பிறகு, ஒலிம்பிக் போட்டிகள் அதன் சிறப்பை இழந்தன. ஒலிம்பிக் போட்டிகளில் மன்னர், அதிகாரவர்க்கத்தின் தலையீடுகள் அதிகமாக... முறைகேடுகள் அதிகரித்தன.

ரோமானியச் சக்கரவர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு ஒலிம்பிக் போட்டி முற்றிலுமாகப் புறக்கணிக்கப் பட்டது. மாற்றுச் சமயத்தினர் கொண்டாடும் விளையாட்டுப்போட்டி என்று ஒதுக்கப்பட்டது ஒலிம்பிக் கிரேக்கக் கலைஞர்களால் ரசித்து ரசித்து உருவாக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் அதன மதிப்பை இழந்தன, புகழ் மங்கிக் கொண்டிருந்த வேளையில்... ஒரு நாள் கி.பி.393 ஆம் ஆண்டில் ஒரேயடியாக ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தடைவிதித்தார் ரோமானியப் பேரரசர் முதலாம் தியோடோசியஸ்.



## ஒலிம்பியா தரைமட்டம்

அவராவது பரவாயில்லை. அவருக்குப் பிறகு ஆட்சிப்பொறுபபேற்ற அவரது மகன் இரண்டாம் தியோடோசியஸ் இன்னும் ஒருபடி மேலே போய் ஒலிம்பியா நகரில் இருந்த ஒலிம்பிக் அரங்கங்கள், கட்டடங்களை இடித்துத் தரைமட்டமாக் கினார். கிறிஸ்து பிறப்பதற்கு முன் பிறந்த ஒலிம்பிக் வரலாறு, கிறிஸ்து பிறந்தபிறகு 393 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தது. அதன் பிறகு, உலகம் ஏறக்குறைய ஒலிம்பிக் பற்றி மறந்து விட்டது.

## அகழ்வாராய்ச்சி

ஆனால், ஒலிம்பிக் என்றென்றும் அழிவில்லாத ஒரு விஷயம் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆம்! உருக்குலைந்து, சமாதியான பின், பற்பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, 1875ஆம் ஆண்டில் ஒலிம்பியா பகுதியில் ஒரு அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. உலக வரலாற்றுக்கு அது ஒரு திருப்பு முனை. அந்த அகழ்வாராய்ச்சியில், ஒலிம்பிக் அரங்கங்கள் உட்பட பல அரிய விஷயங்கள் மீண்டும் உலகின் பார்வைக்கு வந்தது. புராதன ஒலிம்பிக் போட்டிகள் பற்றியும், கிரேக்கர்கள் நடத்திய அற்புதமான இந்த விளையாட்டுத் திருவிழா பற்றியும் வெளிச்சம் பரவியது.

நவீன ஒலிம்பிக் போட்டிகளுக்கான விதை இங்கு தூவப்பட்டது. விதையைத் தூவியவர் பிரெஞ்சுக்காரர்-பாரோன் பியரிடி கோபர்டின். 1863 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பிறந்த கோபர்டின் ஒரு மிகச்சிறந்த மனிதர். அவருக்குப் பிடித்த ஒரே ஒரு விஷயம் என்றால்..... அது விளையாட்டு.

ஆம்! கோபர்டின் ஒரு விளையாட்டுப் பிரியர். தடகளம் உள்ளிட்ட பல விளையாட்டுக்களில் அவரே ஒரு நிபுணர். மிகவும் வசதியான, செல்வாக்கான குடும்பத்தில் பிறந்த கோபர்டின் கவனத்துக்கு ஒலிம்பிக் அகழ்வாராய்ச்சி விஷயம் தெரியவந்தது.

எப்படி சாத்தியமாகும்?

" ஒலிம்பிக் போட்டிகளை புதுப்பித்து ஏன் மீண்டும் நடத்தக் கூடாது...?"- விஷயம் கேள்விப்பட்டதும்., தனது நண்பர்களிடம் கோபர்டின் கேட்ட முதல் கேள்வி இதுதான். கேள்வி கேட்டதோடு விட்டு விட வில்லை. 1892இல் தடகள அமைப்புக்களைக் கூட்டி, தனது ஒலிம்பிக்கனவை வெளிப்படுத்தினார். ஆனால், அவரது பேச்சுக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. " இதெல்லாம் எப்படிச் சாத்தியமாகும் கோபர்டின்....? நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவு, பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த விஷயம் இது. என்ன ஆச்சு உங்களுக்கு?" என்று பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அவரது சக நண்பர்களே கேலி செய்தனர்.

## மீண்டும் ஒலிம்பிக்

ஆனாலும், தனது முயற்சியில் மனம் தளரவில்லை. அவர் ஒலிம்பிக் போட்டிகளுக்கு புத்துயிர் அளிக்கும் பணியில் மேலும், மேலும் அதிக அக்கறை செலுத்தினார். அவரது கனவெல்லாம் அது ஒன்று மட்டுமே. தனது கருத்தை மதிக்கும் ஒரு அமைப்பை அவர் உருவாக்கினார். 12 நாடுகளைச் சேர்ந்த 79 பிரதிநிதிகளை அவர் 1894 இல் ஒன்று திரட்டினார். ஒலிம்பிக் போட்டிகளுக்குப் புத்துயிர் அளிக்க, ஒரு மாநாட்டை நடத்தினார் கோபர்டின். அந்த மாநாட்டில், கோபர்டின் கருத்துக்கு ஒட்டு மொத்த ஆதரவு கிடைத்தது. ஒலிம்பிக் போட்டிகள் பிறந்த இடமான, கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா நகரிலேயே மீண்டும், நவீன ஒலிம்பிக்கின் முதல் போட்டியை நடத்துவது என்று தீர்மானித்தார். கோபர்டின்.

## ஒலிம்பிக்கின் தந்தை

கி.பி.1896,ஏப்பிரல் மாதத்தில் , கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா மலைப்பகுதியில் நவீன கால ஒலிம்பிக் போட்டிகள் முதன் முதலாக துவக்கப்பட்டன. அன்று துவங்கி... இதோ இப்போது மீண்டும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு உலகம் தயாராகி விட்டது. காலத்தால் அழியாத ,ஒலிம்பிக் விளையாட்டை மீண்டும் உலகிற்கு அறிமுகப் படுத்திய கோபர்டின் நவீன ஒலிம்பிக்கின் தந்தை என்று புகழப்படுகிறார்.

## கடைசி ஆசை

ஒலிம்பிக் போட்டிகளுக்கு மீண்டும் உயிர் கொடுப்பது ஒன்றே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்த கோபர்டின், சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில் 1937 இல் மாரடைப்பால் திடீரெனக் காலமானார். அவரது உடல் லாசேன் நகரில் அடக்கம் செய்யப்பட்டது. மரணத்திலும் கூட, ஒலிம்பிக்கை நேசித்தவர் கோபர்டின், அவரது கடைசி ஆசையைப் பற்றிக் கேள்விப்பட்டால், மெய் சிலிர்த்துப் போவீர்கள்.

எந்த நேரமும் ஒலிம்பிக்கை நேசித்துக் கொண்டிருந்த அவரது இதயம், நிரந்தரமாக ஒலிம்பியாவில் இருக்க வேண்டும் என்பது தான் அவரது கடைசி ஆசை. அவரது ஆசைப்படியே, கோபர்டின் இருதயம் மட்டும் கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் புதைக்கப்பட்டது. அதற்கு மேல், கோபர்டின் பெயரை என்றென்றும் நினைவு கூரும் வகையில் ஒரு நினைவு தூண் அமைக் கப்பட்டது. ஒலிம்பிக் போட்டிக ளுக்கு உயிர் கொடுக்க கோபர்டின் நடத்திய மௌனப் போராட்டங்களுக்கு ஒரே சாட்சியாக, அந்த நினைவுத்தூண், ஒலிம்பியா மலையில் இன்னமும் இருக்கிறது. ஒலிம்பியா செல்லும் வாய்ப்புக் கிடைத்தால்.... ஒலிம்பிக் போட்டிகளுக்கு உயிர்கொடுத்த ஒரு மனிதரின் இருதயம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் அந்த இடத்தைப் பார்த்து வரத் தவறாதீர்கள்! உலகின் மிகமுக்கியமான ஒரு வரலாறு அங்கு உறங்குகிறது!

# இடைக்கால நிர்வாகசபைத் திட்டம் தொடர்பாக கருத்து வெளியிட ஆளும் கட்சியினருக்குத் தடை!

## நெருக்கடிகளைத் தவிர்க்க சனாதிபதி முயற்சி

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகசபை தொடர்பான எந்தவொரு கருத்தையும் வெளியில் தெரிவிக்கக்கூடாது என ஆளும்கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு சனாதிபதி கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது என லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.**

அத்துடன் இதுதொடர்பான முக்கிய செய்திகளை வெளியிட மூன்றுபேர் அடங்கிய குழுவொன்றை அவர் நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, அநுரபிரியதர்சன யாப்பா, மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்ட் குரே ஆகியோர் அடங்குவர்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பில் நினைத்தவர் நினைத்தவாறு வெளியில் கருத்துத் தெரிவிப்பதால் இதில் பாரிய பின்னடைவு ஏற்படுவதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதாக அறிய வருகிறது.

எனவே இதிலிருந்து விலகியிருக்குமாறும் ஊடகங்களுக்குப் பேட்டியளிப்பதைத் தவிர்க்குமாறும் அவர் கேட்டிருப்பதாகவும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவும்,அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெறவும், ரணில்விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தவும் சந்திரிகா தீர்மானித் திருப்பதாகவும் தெரிவிக்க ப்படுகிறது.

### தட்டுப்பாடு

இன்றைய சூழலில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் பல பௌதீக ஆளணித் தட்டுப்பாடுகளுடன் இயங்கி வருகின்றன. குறிப்பாக 278 எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு உள்ளது என சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசவிரோதிகள் இணைந்து புதிய கட்சி அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதரணி),புளோட்,கருணா ஆகிய குழுக்களை ஒன்றிணைத்து "சன நாயக முன்னணி" என்னும் பெயரில் அமைப்பொன்று உருவாக்கப் படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் தலைமைப் பொறுப்பை புளொட் குழு ஏற்குமென்றும், சர்வதேச தொடர்பாளராக வரதராஜப் பெருமாள் இருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இந்த அமைப்புக்குஆயுதக்குழு ஒன்றும் இருக்குமென்றும் அதற்கான பொறுப்பை கருணாவிடம் வழங்க தயாராக இவர்கள் இருப்பதாகவும் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## சிறிலங்காவில் விரைவில் தேசிய அரசாங்கம்?

(கொழும்பு)

சிறிலங்காவில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துரையாடவுள்ளனர்.

அடுத்தவாரம் சனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இடம்பெறவுள்ள சந்திப்பிலேயே தேசிய அரசொன்றை அமைப்பது குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது.

இதுதொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான அழைப்பு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான மகிந்த சமரசிங்க மூலமாக சனாதிபதி செயலகம் விடுத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் விடயத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியில் முக்கிய அங்கம் வகிக்கும் ஜே.வி.பியுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக எதிர்க்கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க சனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகின்றது.

## அரசியல் கட்சி பிரச்சாரத்திற்கு தேயிலைச் சபையின் நிதி!

### ~சி.ஐ.டி பிரிவு விசாரணை

இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவர், சபையின் நிதியை அரசியல் கட்சிப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் (சி.ஐ.டி) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.கடந்த பொதுத்தேர்தலின் போது தொலைக்காட்சி சேவையிலும், அச்சு ஊடகங்களிலும் தேயிலைசபையின் நிதியைப் பயன்படுத்தி பிரச்சார விளம்பரங்கள் செய்ததாக சபையின் தலைவரான என்.எம். பெல்பொல என்பவரின் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது. இவர் ஆங்கில சிங்கள பத்திரிகைகளில் விளம்பரம் செய்வ தற்கு பெருமளவு நிதியை பயன்படுத்தியுள்ளார் என சி.ஐ.டி.யினர் தெரிவிக்கின்றனர். இதேவேளை தான் சபையின் நிதியை தவறாக பயன்படுத்தி எந்தவொரு அரசியல் பிரச்சார விளம்பரத்தையும் பத்திரிகைகளில் செய்யவில்லை என்றும் இது குறித்து சி.ஐ.டி.யினருக்கு தெளிவு படுத்தியிருப்பதாகவும் பெல்பொல 'சன்டேலீடர்'ஆங்கில நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

## கருணாவின் சகாக்கள் கொலை தொடர்பாக சிறைச்சாலை உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வைத்து கருணாவின் சகாக்கள் இருவர் சக கைதி ஒருவரால் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த குற்றப் புலனாய்வுத் துறையினர் கைதிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுடைய வாக்கு மூலத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே கடந்த சனிக்கிழமை இரவு இந்த உத்தியோகத்தர் சிறைச்சாலையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்தச் சிறைச்சாலை ஊழியரை கைது செய்தமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினர் பொலிசாருக்குத் தெரிவிக்கும் போது, சிறைச்சாலையினுள் இரண்டு கைக்குண்டுகள் அடங்கியபொதியைக் கொண்டு சென்றமை சாட்சியங்கள் மூலம் தெரியவந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர் மட்டக்களப்பு பதில் நீதவான் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

## மாபெரும் படையணியாக உருவெடுத்துள்ள பிக்குகளுக்கு கட்டளையதிகாரி இல்லை

### -சபிக்க எல்லே குணவங்ச தேரர் கவலை

(கொழும்)

"தேசாபிமான இயக்கம் உருவானதற்குக் காரணம் நமதுதாய் மண்ணைக் காத்து இளம் சந்ததியினரிடம் இட்டுச் செல்வதற்கே அன்றி அரசியல்வாதிகளுக்கு குடை பிடிக்கவும் கம்பளம் விரிக்கவும் அல்ல" இவ்வாறு தெரிவித்திருப்பவர் சிறிலங்காவின் தேசாபிமான இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான சபிக்க எல்லே குணவங்ச என்ற தேரர் ஆவார்.

மாத்தறை மாவட்டத்தில் மேற்படி தேசாபிமான இயக்கத்துக்கான அலுவலகம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போது

" பிக்குகள் என்போர் போற்றப் படக்கூடிய பெயரைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்நாட்டின் காவல் தெய்வங்களாவர். இரண்டாயிரம் வருடங்களாக அவர்கள் வேதனமின்றி சேவையாற்றி நாட்டைப்பாதுகாக்கின்றனர். எனவே அவர்களை காவல் தெய்வங்களாக கூறுவதில் என்ன தவறு இருக்கிறது".

இவ்வாறு கூறிய அவர் பிக்குகள் தற்போது மாபெரும் படையணியாக உருவெடுத்திருப்பதாகவும் அவர்களுக்குக் கட்டளையதிகாரி ஒருவர் இல்லை என்றும் அதிகாரிகளுக்கான பத வியிருந்தும் புத்த சாசனத்தில் அவ் வாறு குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்ததுடன் அதனாலேயே ஆபத்துக்களில் தாமாகவே தோள் கொடுக்க வேண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தான் ஒரு போதும் அரசியலில் ஈடுபடவில்லை என்றும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் அரசியலுக்குவர நேர்ந்திருப் பதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சிக் காலத்தில் நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் வெளியாருக்கு விற் பனை செய்து புலிகளுக்கு நாட் டை பிரித்துக் கொடுக்க ரணில் திட்டம் தீட்டியிருந்தார். தேசாபிமான இயக்கத்தில் இருந்த நான்கைந்து பேரின் எதிர்ப்பினால் அது தடுக் கப்பட்டது. சனா திபதி அண்மை யில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பேச்சு நடத்தப் போவதில்லை என்று கூறியதால் அவருக்கு நன்றி கூறுகின்றோம் என் றும் கூறியுள்ளார்.

## போலித் தகவல்கள் சமர்ப்பித்து பதவியுயர்வு பெற்றோர் விசாரணை

(கொழும்பு)

போலித்தகவல்களை சமர்ப்பித்து பதவி உயர்வுகளைப் பெற்றதாகக் கூறப்படும் 30 பேருக்கெதிராக விசாரணைகளை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். விசாரணைகளின்போது தவறு கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு உடந்தையாக இருந்த உயரதிகாரிகளுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதற்கு தலைமைக் காரியாலயத்தில் செய்யப்படும் சுயவிபரக்கோவை தயாரித்தலை பயிற்சி வழங்குவோர் அப்பணியைச் செய்வதே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மற்றொரு பொதுத் தேர்தலை எதிர்கொள்ள முன்னேற்பாடு!

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் அரசினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டம் பொதுத் தேர்தல் சம்பந்தப் பட்டதாக இருக்கும் என சனாதிபதி அறிவித்துள்ளார் என சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஆகவே முடிந்த அளவு பொருட்களை விலைகுறைப்பதற்கும், விவசாயிகளுக்கு மேலும் குறைந்த விலையில் உரமானியங்களை வழங்கவும்,வரிதீர்வைகளை ரத்துச் செய்யவும் அரசாங்கம் தற்பொழுது தீர்மானித்துள்ளது. அரச ஊழியர்களுக்கு அதிகளவு சம்பளம் வழங்கவும், தீர்மானித்துள்ளதாக சனாதிபதி அறிவித்துள்ளார் என சனாதிபதி மாளிகை வட்டாரங்களை மேற் கோள் காட்டி 'லங்காதீப்' பத்திரிகை தெரிவித்துள்ளது.


உடனடி வேலை வாய்ப்பு

இதோ! கவலையே வேண்டாம்

டோகா கட்டார்

- 30 நாட்களுக்குள் பயணம்
- தொழில் – மேசன்
- சம்பளம் –20,000 ரூபாவுக்கு மேல்
- வேலை நேரம் – 08 மணித்தியாலம்
- மேலதிக நேரக் கொடுப்பனவு உண்டு.(over time)

பயணச் செலவில் அரைவாசித் தொகைக்கு கடன் வசதி செய்து தரப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு-
A.A. மைக்கல் தொலைபேசி-0777.279813

(சி.9960)



1ஆம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 23 . 06 . 1956



மறைவு 25 . 07 . 2003

திதி-11. 08. 2004

அமரர் வேலுப்பிள்ளை நவரத்தினம்

11. 08. 2004 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
2ஆம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.

(சி.9176)

# பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேசவேண்டிய விடயங்களுக்கு இந்திய அமைச்சர்குழு ஒப்புதல்

(புதுடில்லி)

**பயங்கரவாதம், போதைப்பொருள் தடுப்புப் பற்றி இந்தியா-பாகிஸ்தான் உள்த்துறை செயலர்களிடையே இன்று இஸ்லாமபாத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் விவாதிக்க வேண்டிய அம்சங்களுக்கு பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.**

நேற்று புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்ற இக்குழுக்கூட்டத்திலேயே ஆராய்வின் பின் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டதுஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த விபரங்களின் அடிப்படையிலேயே பாகிஸ்தானுடன் பேச்சுநடைபெறும் என்று பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இதனிடையே போர்க் கைதிகளாக இருந்த இந்தியர்கள் இருவரை பாகிஸ்தானும், பாகிஸ்தானியர்கள் நால்வரை இந்தியாவும் நேற்று வாகா எல்லையில் பரஸ்பரம் விடுதலை செய்தன.

## கணக்குத்தணிக்கைத்துறை அறிக்கைபற்றி சட்டப்பேரவையில் விவாதிக்கவேண்டும்

### - பா.ஜ.கட்சி ராஜா வலியுறுத்து

(சென்னை)

கணக்குத் தணிக்கைத்துறை அறிக்கை பற்றி தமிழக சட்டப் பேரவையில் விவாதிக்கவேண்டும் என்று தமிழக பா.ஜ கட்சி பொதுச் செயலர் ராஜா வலியுறுத்தியுள்ளார்.

மதுரையில் செய்தியாளரைச் சந்தித்த அவர் மாநில அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தி.மு கழக ஆட்சிக் காலத்தில் மாநில அரசுக்கு 4300 கோடி ரூபாய்தான் வருவாய் இழப்பு ஏற்பட்டதாகக் கூறிய ராஜா கடந்த மூன்று ஆண்டுகள் அ.இ.அ.தி.மு.கழக ஆட்சியில் 9000 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுடன் ஆயுதப்போட்டியில் ஈடுபடும் எண்ணம் இந்தியாவிற்கில்லை

### - இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப்முகர்ஜி

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் ஆயுதப் போட்டியில் ஈடுபடும் எண்ணம் இந்தியாவிற்கு இல்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் அணுவாயுதப் பலத்தை மேம்படுத்துவது குறித்து பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் அண்மையில் விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; இருநாடுகளும் ஆயுதப்போட்டியைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் எல்லை நெடுகிலும் உள்ள படைகளைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## பிரதமரின் அலுவலகமருகே டில்லியில் தீவிபத்து

(புதுடில்லி)

டில்லியில் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் நேற்றுக் காலை மின்சாரக் கசிவினால் ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அலுவலகம் அருகேயும், பிரதமர் அலுவலகம் அருகேயும் தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் தீயை அணைத்துள்ளனர். இதன் போது உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப் படுகின்றது.

## நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையை தேசியப்பிரச்சினையாக கவனத்தில் எடுக்குக!

### - *மன்மோகன்சிங்கிடம் வாஜ்பாய் கோரிக்கை*

(புதுடில்லி)

நதி நீரைப்பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஒருமித்த கருத்தை ஏற்படுத்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கடிதம் எழுதியுள் ளார். ராஜஸ்தான், கரியானா, டில்லி உள்ளிட்ட மாநிலங்களுடன் நதி நீரைப்பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்தை பஞ்ஜாப் மாநில அரசு ஏற்க மறுத்துள்ளதால் எழுந்துள்ள பிரச்சினை விஸ்வரூபம் எடுக்குமுன் இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி சுமுகத்தீர்வு காண வேண்டு மென்று பிரதமர் மன்மோகன்சிங்கை வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

## பெற்றோல், டீசல் விலை உயர்வை கண்டிக்கிறது இந்.கம்யூனிஸ்ட் கட்சி

### – *மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடாத்தவும் முடிவு*

மத்தியரசு தொடர்ந்து பெற்றோல், டீசல் விலைகளை உயர்த்தி வருவதைக் கண்டித்து எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் கூட்டங்கள் நடத்தப்படுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கூறுகையில்;

மத்தியில் கூட்டணி ஆட்சி அமைத்துள்ள காங்கிரஸ் கட்சி பொதுச் செயற்றிட்டத்தினை உறுதியுடன் செயற்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார். மத்திய பட்ஜெட்டில் பொதுவான செயற்றிட்டம் தெளிவாகப் பிரதிபலிக்கவில்லையென்று கூறிய அவர் பட்ஜெட்டில் குறைகள் இருப்பதாகவும் தெரிவித்தார். தேசிய தொழில்களில் அந்நிய மூலதனம் அதிகளவில் அனுமதிக் கப்படுவதற்கெதிராக பாராளுமன்றத்தில் இடதுசாரிகள் தொடர்ந்தும் குரல் கொடுப்பார்கள் என்று கூறிய கம்யூனிட்ஸ் கட்சியின் மாநிலச் செயலாளர் பெற்றோல், டீசல் விலைகள் தொடர்ந்து உயர்த்தப் படுவதைக் கண்டித்து மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தப் படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## கர்நாடகாவில் வேற்று மொழிப் படங்களை 3 மாதங்கள் கழித்தே திரையிட வேண்டும்

### வலியுறுத்தி நடிகர், நடிகைகள் பேரணி

(பெங்களூர்)

கர்நாடகாவில் கன்னடம் தவிர வேறு மொழித் திரைப் படங்களை மூன்று மாதகாலம் கழித்தே திரையிடப்பட வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடிகர், நடிகைகள் நேற்றுப் பேரணி ஒன்றை பெங்களூரில் நடத்தியுள்ளனர்.

பிறமொழித் திரைப்படங்களுக்கு விதித்துள்ள பொழுது போக்குவரியை 40 சதவீதமாகக் குறைக்கக் கூடாது என்பதும் அவர்களது முக்கிய கோரிக்கையாகும்.

இந்தப் பேரணியில் கன்னட முன்னணி நடிகர் ராஜ்குமார், விஷ்ணுவரதன், ரவிச்சந்திரன், அந்திரீஸ் மற்றும் நடிகை பிறேமா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் ஆதரவு அவசியமாம்

(கொழும்பு)

பௌத்தர்கள் மாற்று மதங்களுக்கு மாறுவது சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்றத்திற்கு ஜாதிகஹெல உறுமயக்கட்சியினரால் கொண்டுவரும் மசோதாவிற்கான நாட்டின் சகல பௌத்த மக்களின் ஆதரவுகளைப் பெறுவது மிக அவசியம் என அமரபுர சங்கசபை மாகாநாயக்க கொட்டுஹொடதம்மாவாசதேரர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இது பௌத்த நாடாக உள்ளதென்றும், வெள்ளையர்களின் ஆட்சிக்காலத்தில் ஆளுநர் றொபேட் பிர்வ்ரின் கண்டி சிங்களவர் உடன்படிக்கையில் இலங்கை பௌத்த நாடு என்று ஏற்றுக்கொண்டு அதில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

## அரச நிர்வாகம் ஆர்.எஸ்.எஸ்.இன் பிடியிலுள்ளது அர்ஜீன்சிங்கின் கூற்றை ஆட்சேபிக்கிறார் இலகணேசன்

(புதுடில்லி)

இந்திய அரச நிர்வாகம் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் பிடியில் இருப்பதாக மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜீன்சிங் கூறியிருப்பதற்கு பாரதிய ஜனதாக்கட்சியின் தேசியச்செயலாளர் இலகணேசன் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் ஒருவர் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதாலேயே அரச ஊழியராக இருக்கத் தகுதி அற்றவரா? என்று கேள்வி எழுப்பினார்.

பாஜ. கட்சி, அஇஅதிமு. கழகக் கூட்டணி தேர்தலுக்காக அமைக்கப் பட்டது என்றும் தற்போது இரு கட்சிகளும் தனித் தனியாகவே செயற்பட்டு வருகின்றன என்றும் இலகணேசன் தெரிவித்துள்ளார்.



மேற்கு இந்தியாவின் வடபகுதியான அகமதாபாத்தில் நச்சுப் புற்களை உண்ட மாடுகள் இறந்துகிடக்கின்றன.

## கொழும்பிலும் அண்மித்த பகுதிகளிலும் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

### - சிறி. பாதுகாப்பு அமைச்சின் செயலர்

(கொழும்பு)

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப் படுவதாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலகரணதிராஜா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களின் ஊடாக இரவு நேரங்களில் பாதுகாப்புக் கடமைகளை உரிய முறையில் அமுற்படுத்தாமையே இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பல வருடங்களாக இது தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை யென மக்கள் பாதுகாப்பு மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளதுடன், புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறு அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில குற்றச் செயல்கள் அதே நிலையிலேயே காணப்படுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம், வாகனக் கொள்ளைகள் போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பாரிய வாகன விபத்துக்கள் சிறிதளவு குறைந்துள்ளதென்றும், இதனால் விசேட ஆலோசனைகள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிற்கு வழங்கப் பட்டுள்ளன. யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந் ததைப் போன்று அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதி காரிகளும் வீதி ரோந்துகளை மேற்கொள்ள வேண்டுமென ஒழுங்கு செய்யப் பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி –2004

## 202 நாடுகளைச் சேர்ந்த 11000 வீர, வீராங்கனைகள்

இம் மாதம் 13 ஆம் திகதி முதல் 29ஆம் திக்தி வரை நடைபெறவுள்ள எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 301 தங்கப்பதக்கங்களுக்காக 202 நாடுகளைச் சேர்ந்த 11000 வீர வீராங்கனைகள் 28 விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர்.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக போட்டிகளில் பங்கேற்கும் 11000 வீரவீராங்கனைகளும், அதிகாரிகளும் பார்வையாளர்களும் எதென்சை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப விழாவில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றவுள்ளனர்..

இந்த முக்கிய பிரமுகர்கள் தங்குவதற்கு கிரேக்கக் கடலில் மிதக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்று எலிசபெத் மகாராணி என்ற பெயர் கொண்ட கப்பலில் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் எதென்ஸ் நகரில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



புதிப்பிக்கப்பட்ட எதென்ஸ் நகரம்.

## எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளை 400 கோடி பேர் கண்டு ரசிப்பர்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை உலகெங்கும் உள்ள 400 கோடி மக்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி கூறியுள்ளது.

கடந்த 2000 சிட்னி ஒலிம்பிக்கைவிட மிக அதிக அளவு தொலைக்காட்சிகள் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை ஒளிபரப்புகின்றன. ஆகஸ்ட் 13 முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறும் போட்டிகளை உலகெங்கும் உள்ள 300 சனல்கள் 35 ஆயிரம் மணிகளுக்கு ஒளிபரப்ப உள்ளன. இது புதிய சாதனையாகும். சிட்னி ஒலிம்பிக்கை 370 கோடி பேர் கண்டு ரசித்தனர். அதேபோல் முதல முறையாக எதென்ஸ் ஒலிம்பிக்கில் மிகவும் அதிகபட்சமாக 202 நாடுகள் பங்கேற்கின்றன.

## ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் ஈராக் அணி அவுஸ்திரேலிய போர் விமானத்தில் எதென்ஸ் சென்றது

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் ஈராக்கிய வீரர்களை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலிய விமானப்படை விமானம் ஒன்று எதென்ஸ் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இவர்கள் பாக்தாத்திலிருந்து சென்றதாகவும் அவுஸ்திரேலிய றோயல் விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கன்பராவில் அதிகாரியொருவர் தெரிவித்தார்.


அவுஸ்திரேலியர்களால் இவர்களுக்கு வழங்கப்படும் இவ்வுதவி வீரர்களின் வெற்றிபெறும் கனவை நனவாக்கும் என்றும், இவ்வாறான ஒரு பெருவிளையாட்டில் பங்குபற்றிய மகிழ்ச்சியை வழங்கும் எனவும் கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியபாதுகாப்புஅதிகாரி கூறும் போது; ஈராக் அணியினர் அவுஸ்திரேலியர்களுடன் செல்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் ஆயினும் பாதுகாப்புக்கருதி அவர்கள் சென்று தங்குமிடத்தைக் கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார். ஈராக்கிய அணி கால்பந்து, பளுதூக்கல் போட்டிகளுக்கு தகுதி பெற்றிருப்பதாகவும் நீச்சல், குத்துச்சண்டை, ஜூடோ போன்ற போட்டிகளுக்கும் அழைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## ஜூடோ சம்பியன் எழினிலோனு ஒலிம்பிக்கில் பங்கேற்பது சந்தேகம்

கிரேக்க நாட்டின் ஜூடோ சாம்பியனான வீராங்கனை எழினிலோனு கடந்த சனிக்கிழமை காலை மூன்று மாடிக் கட்டடத்திலிருந்து வீழ்ந்து காயத்துக்குள்ளாகியுள்ளார். இதனால் வெள்ளியன்று ஆரம்பமாகும் எதென்ஸ் போட்டிகளில் இவர் பங்கேற்பது கேள்விக்குறியாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

உடனடியாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர் சத்திரசிகிச்சைக்குள்ளாகியிருக்கிறார். அவரின் தலையில் பலத்த காயங்களும் உடம்பில் ஆங்காங்கு சிறு காயங்களும் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 20 வயதான லோனு எதென்ஸ் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் ஸ்பெயினின் ஷிரோவை சமன் செய்தார்

மெய்ன்ஸ்செஸ் கிளாசிக் தொடரின் ஐந்தாவது சுற்றை சமன் செய்தார் ஆனந்த்.

ஜேர்மனியில் உள்ள மெய்ன்ஸ் நகரில் பிரபல செஸ் கிளாசிக்தொடர் நடக்கிறது. இதில் இந்தியாவின் ஆனந்த். ஸ்பெயினின் அலெக்கி ஷிரோவை எதிர்த்து விளையாடி வருகிறார். நேற்று நடந்த ஐந்தாவது சுற்றில் ஷிரோவ் அற்புதமாகக் காய்களை நகர்த்தி ஆனந்துக்கு அதிர்ச்சி கொடுத்தார். விட்டுக்கொடுக்காமல் போராடிய இவர்கள் 43ஆவது நகர்த்தலில் போட்டியை சமன் செய்வதென முடிவு செய்தனர். 8சுற்றுகள்கொண்ட இத்தொடரில் இன்னும் 3சுற்றுகளே உள்ளன. எனவே 3-2 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள ஆனந்த் அடுத்த சுற்றை எதிர் கொள்ளவுள்ளார்.

## ஒன்பது மாதங்களின் பின்னர் அகாஸி பட்டம் வென்றார்




அமெரிக்காவின் சின்சினாட்டியில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் அகாஸி ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர் அவுஸ்திரேலியாவின் லெயிட்டன் ஹெவிட்டை 6-3,3-6,6-2 என்ற செற்கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஒன்பது மாதங்களின் பின்னர் அகாஸி பட்டம் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.




## மொறிஸ் உடும்பே. மீண்டும் கென்ய அணியில்




ஆட்ட நிர்ணய சதி குறித்து சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தினால் தடைக்கு உட்பட்டிருந்த கென்ய கிரிக்கெட் வீரர் மொறிஸ் உடும்பே மீண்டும் அணியில் விளையாடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள மினி உலகக் கிண்ணத்துக்கான கென்ய அணியில் இவர் இடம் பிடித்துள்ளார்.

இவரோடு அணியில் மிக முக்கியமாக இணைக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்ட சுழற்பந்து வீச்சாளர் கொலின் ஒபேயா சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால் கென்ய அணியில் இணைத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### சுசந்திகா விலகினார்

சிறிலங்கா ஒலிம்பிக் குழாமிற்கு தலைமை தாங்கி சென்ற சுசந்திகா ஜெயசிங்க ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதில்லை என இறுதி நேரத்தில் அறிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஏ.டி.பி. டென்னிஸ் போட்டித்தொடர் பயஸ்-பூபதி ஜோடி காலிறுதியில் தோல்வி

சின்சினாட்டியில் நடைபெற்றுவரும் ஏ.டி.பி. டென்னிஸ் மாஸ்டர்ஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி தோல்வி அடைந்தது.


தரவரிசையில் 8ஆவது இடத்தில் உள்ள இந்திய ஜோடி 3-6, 4-6 என்ற கணக்கில் பகாமஸின் மார்க் நௌலஸ், கனடாவின் டெனியஸ் நெஸ்டர் ஜோடியிடம் தோல்வி அடைந்தது.

27 மாத இடைவெளிக்குப் பிறகு இணைந்த பயஸ் பூபதி ஜோடி, கடந்த வாரம் டொரன்டோ மாஸ்டர்ஸ் போட்டியில் பட்டம் வென்றது. இந்தப் போட்டியில் பட்டம் வென்றால் அடுத்த வாரம் தொடங்கும் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தரவரிசையில் முன்னேற்றம் பெற்றிருக்கும் இந்திய ஜோடி.

## மேற்கிந்திய தீவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியில் சுழல்பந்து வீச்சாளர் கரத்பட்டி

மேற்கிந்தியத்தீவு- இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஓல்ட் ரப்பர்ட் (old trafford) மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. முதல் இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று இங்கிலாந்து முன்னணி வகிக்கிறது.தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக மூன்றாவது போட்டியிலும் மார்க் புச்சர் பங்கேற்கமாட்டார். இவரின் இடத்தை தொடர்ந்தும் றொபர்ட்கீ நிரப்புவார். இம் மைதானம் சுழல் பந்துவீச்சுக்கு சாதகமானதால் சுழல்பந்து வீச்சாளரான 26 வயதுடைய கரத் பட்டி இணைத்துக் கொள்ளப்படுவார் என இங்கிலாந்து தேர்வாளர் டேவிட் கிராவின்ஸ் தெரிவிக்கிறார்.

## சிறப்புற நடைபெற்ற கரைச்சி பிரதேச முன்பள்ளி விளையாட்டுப் போட்டி





(படம் ச, தீ)


ஜெயந்திநகர் கரைச்சிப்பிரதேசசபை முன்பள்ளி விளையாட்டுப்போட்டி நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சிறுவர் சிறுமியரின் இசையும் அசைவும், ஓட்டப்போட்டிகள் , உருவம் தெரிதல் மற்றும் பல் வேறு சிறப்பம்சங்கள் நிறைந்த விளையாட்டுக்களும் இடம்பெற்றது. தொடர்ந்து பழைய மாணவர்கள் நிகழ்வு, பார்வையாளர் நிகழ்வு என பல நிகழ்வுகளும் இடம் பெற்றது. இந்நிகழ்வினை சிறப்பிக்க முதன்மை விருந்தினராகக் கரைச்சி பிரதேசசபை செயலாளர் பொன் நித்தியானந்தம் அவர்களும் நெக்றோ நிறுவனப் பிரதிநிதியும் தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிர்வாக உத்தியோகத்தர் ரஜனி அவர்களும் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெற்றார்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## முல்லை மாவட்ட பெண்கள் அணிக்கு மாகாண போட்டியில் இரண்டாம் இடம்

கடந்த 24,25 ஆகிய திகதிகளில் வவுனியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்திலான பெண்களுக்கான எல்லே போட்டியில் முல்லை மாவட்டம் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

8 மாவட்டங்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் திருகோணமலை, முல்லைத்தீவு இறுதிப் போட்டியில் மோதின. இதில் திருமலை அணி முதலாம் இடத்தையும் முல்லை அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

(20)



### சிந்தனைக்கு

தமிழ் சிங்கள பாட்டாளிகள் மத்தியில் வர்த்தக ஒருமைப்பாடு ஏற்படுவதானால், தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yarioo.com

## பெரும் மகிழ்விற்கு இடமில்லை!

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய ராஜீக முயற்சிக்கு நோர்வே அரசு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. மீண்டும் சமாதான முயற்சியில் ஈடுபடுமாறு நோர்வே அரசிற்கு இராஜீக ரீதியாகச் சனாதிபதி சந்திரிகா விடுத்த அழைப்பைத் தொடர்ந்தே இம் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதி சந்திரிகா தற்போதைய சூழ்நிலையில் எடுத்துள்ள புதிய நகர்வானது அவசியமானதெனக் குறிப்பிட்டுள்ள நோர்வே தரப்பினர் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் கொழும்பிற்கு வரவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

நோர்வேத் தரப்பிற்கு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சனாதிபதி சந்திரிகா விடுக்கும் முதலாவது அழைப்பு அல்ல இது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்த பின்னர் விடும் மூன்றாவது அழைப்பாகும் இது. இதற்கு முன்னரும் அதாவது 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து பலதடவை நோர்வேக்கான அழைப்பினை சனாதிபதி சந்திரிகா விடுத்திருந்தமை பழைய கதையாகும்.

ஆனால் ஐ.ம.சு.முன்னணி ஆட்சிக்கு வந்தபின்னர் சனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள கடந்தகால அழைப்புக்களில் இருந்து தற்போது விடுத்துள்ள அழைப்பானது சற்று வேறுபாடானதொரு சூழ்நிலையில் விடுக்கப்பட்டது என்றே கூறலாம். அதாவது ஐ.ம.சு.முன்னணியின் தலைமைப்பதவியில் இருந்து சனாதிபதி சந்திரிகா வெளியேறிய பின்னர் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு என்ற ரீதியில் இதன் முக்கியத்துவம் சற்று வேறுபாடானதேயாகும். ஏனெனில் ஐ.ம.சு.முன்னிணியின் தலைமைப்பதவியை சனாதிபதி சந்திரிகா விருப்பத்துடன் துறந்தார் என்றுகொள்ள முடியாது. ஜே.வி.பி.யின் நெருக்குதல், ஒருவகையில் பார்த்தால் ஜே.வி.பி.யின் இம்சை தாங்கமுடியாது என்ற நிலையிலேயே சனாதிபதி சந்திரிகா ஐ.ம.சு.முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து வெளியேறியிருந்தார்.

அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்தும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தும் ஜே.வி.பி.யுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே சனாதிபதி சந்திரிகா தலைமைப்பதவியை இராஜினாமாச் செய்தார் எனலாம். இந்நிலையில் சனாதிபதி நோர்வேயை மீண்டும் அழைத்தமையானது சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டிற்கு மாறான அரசியல் நகர்வுகளைச் செய்யலாம் என எதிர்பார்க்கையைத் தோற்றிவிப்பதாகவுள்ளது.

இத்தகையதொரு நகர்விற்கே நோர்வே அரசு மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது. ஏனெனில் ஜே.வி.பி.யின் பிடியில் /அழுத்தத்தில் இருந்து சனாதிபதி சந்திரிகா விடுபடாது இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக்காண்பதென்பது சாத்தியமற்றதென்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. இதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாதுபோனால் இலங்கையில் எப்பிரச்சினைக்கும் தீர்வென்பது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தற்பொழுது நோர்வேயை அழைத்திருப்பினும் கடந்தகாலத்தைப் போன்று இறுதியில் நோர்வேயை நட்டாற்றில் கைவிடமாட்டார் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் முரண்பட்டுக்கொண்டவராக இருக்கலாம். ஆனால் ஜே.வி.பி.யின் ஆதரவு இன்றி அரசாங்கத்தை அவரால் பாதுகாக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே.

இந்நிலையில்தான் சனாதிபதி சந்திரிகாவின் அழைப்புக் குறித்துச் சிந்திக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. சந்திரிகா குமாரதுங்கவிடம் சனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரம் இருக்கலாம். ஆனால் ஜே.வி.பி.யின் போக்கைத் தீர்மானிக்கவோ, கட்டுப்படுத்தவோ இதனால் முடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வா? ஐ.ம.சு.முன்னணியின் அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கம் வகிக்கும், தலைமை கட்சியின ஆட்சியா என்பதை சனாதிபதி சந்திரிகாவே தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

இதன் காரணமாகத்தான் சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய முடிவு வரவேற்கத்தக்கதாயினும் இதில் பெருமகிழ்ச்சி எதுவுமே இல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா மீண்டும் நோர்வேயைக் கைவிடமாட்டார் என்றோ, ஆட்சி அதிகாரத்திற்காக அரசியற்தீர்வைக்கைவிடமாட்டார் என்றோ உறுதிகூறிவிட முடியாது. ஏனெனில் ஆட்சி அதிகாரத்திற்கான எத்தகைய நடவடிக்கைகளையும அவர் மேற்கொள்ளத்தக்கவர் என்பதே கடந்தகால வரலாறாகும்.

ஆயினும், சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய நடவடிக்கைகள் சற்றுமுன்னேற்றமான நடவடிக்கை என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அவரின் நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். ஆனால் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்படும் சூழ்நிலை உருப்பெறுவதற்கு முன்னதாகவே ஜே.வி.பி.தனது குழப்பத்தை ஆரம்பித்துவிடலாம்.

# சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்

### -துறைமுகங்கள் பிரதியமைச்சர் டிலான் சமரவீர

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இந்த விடயத்தைப் பிற்போட முடியாது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினுடைய ஆட்சிக்காலத்திலேயே இதனை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு துறைமுக மற்றும் விமானசேவைகள் பிரதியமைச்சர் டிலான் சமரவீர தெரிவித்தார். இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 25 வருட வெள்ளி விழா நிகழ்வுகள் திருகோணமலைத் துறைமுகத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. இதில் 25 வருடங்கள் சேவையாற்றிய 40 ஊழியர்களுக்கு தலா 10,000 ரூபா பணப்பரிசும், க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்த ஊழியர்களின் பிள்ளைகள் மூவருக்கு புலமைப் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் மற்றுமொரு பிரதி அமைச்சரான தயாஷிரித்த திசேராவும திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான நஜீப் ஏ.மஜீத். மற்றும் ஜயந்த விஜயசேகரவும் கலந்து கொண்டனர்.

பிரதியமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: இலங்கைத் துறைமுக அதிகாரசபை தனது பிள்ளைகளான காலி, அம்பாந்தோட்டை துறைமுகங்களை அபிவிருத்தி செய்துள்ளது. மற்றுமொரு பிள்ளையான திருகோணமலை துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து ஒலுவில், காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களும் அபிவிருத்தி நடவடிக்கைகள் செய்வதற்கு எடுக்கப்படும்.

காப்புறுதிக் கட்டணங்களின் அதிகரிப்புக் காரணமாக பெரும்பாலான கப்பல்கள் திருகோணமலைக்கு வருவதில்லை. அவைகள் கொழும்பு துறைமுகத்தையே நாடுகின்றன. முன்னர் துறைமுகங்கள் திறைசேரியின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டன. ஆனால் தற்போது திறைசேரிக்குக் பெருமளவிலான நிதிகளை வழங்கும் நிறுவனமாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது.

துறைமுகத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். விரைவில் திருகோணமலையும் அபிவிருத்தி காணும் என்றார். (32)

# சனாதிபதியின் முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிப்பது குறித்து பொ.ஐ.மு. ஆராயும்

சனாதிபதியின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிக்கும் முகமாக பொது ஜன முக்கிய முன்னணியின் கட்சிகள் ஒன்று கூடவுள்ளன. எதிர்வரும் வாரத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இடைக்கால நிர்வாகத்திற்கு சமமான தீர்வு ஒன்றைச் சனாதிபதி முன்வைக்கும் அதேநேரம் அதனை மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலைலேயே பொதுசன முன்னணியின் இந்த ஏற்பாடு இடம் பெறுகிறது. இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதில் கட்சியின் மீளமைப்புக் குறித்துப் பேசப்பட்டுள்ளது. இந்த கூட்டத்திற்கு கட்சியின் உதவித தலைவர் கருஜெயசூரிய தலைமை தாங்கினார். (32)

# ஜாதிக ஹெல உறுமய குழுவினரிடையே மகரகமவில் மோதல் நிலை

ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் இரு குழுவினருக்கு இடையே நேற்று மாலை மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் மோதல் நிலை ஏற்பட்டது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மாற்றுக் குழுவினரின் விசேட கூட்டம் ஒன்று நேற்று மாலை மகரகம இளைஞர்சேவை மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மற்றுமொரு குழு உள்ளே நுழைந்ததிலேயே இந்தக் பதற்றம் ஏற்பட் டது. இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இளைஞர் சேவை மன்றத்திற்கு முன்பாக நேற்று மாலை ஆர்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதன் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் மாற்றுக் குழுவின் கூட்டத்திற்குச் சென்று அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த சம்பவமானது உண்மையான பௌத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது என்று, ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரான ஹெக்டர் விக்கிரமசிங்க தெரிவித்தார். குழப்பத்திற்குக் காரணமாக இருந்த பல தேரர்கள் ஜாதிகஹெல உறுமய அமைப்பில உள்ளவர்கள் என்றும் அவர் கூறினார்.

# சீரற்ற பொருளாதாரக் கொள்கை நாட்டில் லஞ்ச ஊழல் பெருகக் காரணம்

### -லஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

இலங்கையில் நாளுக்கு நாள் லஞ்சம் மற்றும் ஊழல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்த விடயம் வெளிக் கொணரப்பட்டது. நாட்டின் சிரற்ற பொருளாதாரக் கொள்கை சட்ட இறுக்கமின்மை மற்றும் அரசங்க ஊழியர்களுக்குகான சம்பள அளவானது வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது பாரிய குறையாகக் காணப்படுவது என்பதுவே இதற்கான காரணங்கள் என லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் உறுப்பினரான கிங்ஸ்லி விக்கிரமசூரிய தெரிவித்தார். (32)

## அவசர காலச் சட்டம் முடிவெதுவுமில்லை

மேல்மாகணசபை எல்லைக்குள் அவசரகாலச் சட்டம் இதுவரை அமுறப்படுத்தப்படவில்லை என அமைச்சர் திலக் ரணவிராஜ் தெரிவித்துள்ளார்.

மேல்மாகண சபை எல்லைக்குள் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுறப்படுத்த பாதுகாப்பு அமைச்சு ஆலோசித்து வருவதாக கொழும்பில் பரவலாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் அண்மைக் காலமாக இடம்பெறும் கொலைகள் காரணமாகவே இவ்வாறான ஒரு முடிவை எடுக்க வேண்டியிருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி அச்செய்திகள் வெளியாகியிருந்தன. இருந்தபோதிலும் இதுவரையல் அவசரகால நிலை எதனையும் அறிவிக்க முடிவு எடுக்கப் படவில்லை என அமைச்சர் ரணவிராஜ் அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

# பாடசாலை ரீதியாக சிறந்த பெறு பேறுகள்

இவ் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகளில் பாடசாலை ரீதியாக சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயப் பெறுபேறுகள் வருமாறு!

**கணிதம**

சிவனருள்சுந்தரம் தாருணி 3B-1, சச்சிதானந்தமூர்த்தி குமாரவளவன் 2B ,S -5 நல்லைநாதன் அகில்ராஜ் B 2C -6, இராசையா அபிநவ் 3 C 11 சோதிலிங்கம் றவிசங்கர் 2 CS -14, எமிலியானுஸ் பவுல்ராஜ் B 2S 16, உயிரியல் யோண்சிங்கம் யோண் பிரகாஸ் ABC-2, செலஸ்ரீன்திருச்செல்வம் மேரி ஆஞ்சலா 2 C S -14

**கலை**

கனகசுந்தரசுவாமி ஜீவர்சினி 2AB -1, ஐயாத்துரை கோபு 2AB -6, ஸ்ரீசாந்தன் றொசானி 2AB -10, இராசரெட்ணம் துதிகலா A2B -11, சிவசுப்ரமணியம் ஜெயந்தினி ABC -14, தியாகராசா ரவீந்திரன்A2B -15, சிங்கராஜா அருள்வதனி 2AC -16,நாகேந்திரன் மேரிபஸ்ரியன் A2B -20, முத்துலிங்கம் சுதர்சிகா ABC -29, இரவீந்திரன் சுதர்சனா 3B-31, பெனடிற ஸ்ரீபன் 2BC-37, ஆனந்தராசா ஜெயநேசன் 2AC -38, ரவீந்திரன் சுதர்சன் ABC -49, விமலேந்திரன் முகந்தன்ABC- 54, சிவலிங்கம் றமேஸ் 3B -54, மருதப்பு வளர்மதி 3B -57, அல்பிறட் அஜந்தினி 2BS -59

**வர்த்தகம்**

செல்வன் கீரன் 3A -1, நாகதம்பி றதீகன் 3A -2, சிவாநந்தராசா அர்ச்சனா 3A -6, சிவராசா றாஜிதா2AB -7, நாகேஸ்வரன் ஜெயதீபன் 3A -08, ஞானப்பிரகாசம் யூட்மயூரன் 2AB -9, சிவலிங்கம் சிவறூபன் 3A -15, சிவலிங்கம் சுரேஸ் 3A -16, இரட்ணசிங்கம் சுபாசினி 2AB -17, பாலசிங்கம் ஸ்ரீறமணன் 2AB-18, சோமசுந்தரம் சத்தியகாந்தன்2AB -21 (08)

# தென்பகுதி பல்கலைகளுடன் ஒப்பிடுகையில்
# யாழ்.இல் வசதிகுறைவாகவே உள்ளது

### மாணவர் கொந்தளிப்பதாக துணைவேந்தர் தெரிவிப்பு

தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுடன் எமது பல்கலைக்கழகத்தை சீர்தூக்கிப் பார்க்கும் போது எங்கள் பல்கலைக்கழகம் வசதிகளற்றதாகவே உள்ளதாக மாணவாகள் கொந்தளிக்கிறார்கள் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி மோகனதாஸ் கூறியுள்ளார். தென்னிலங் கைக்கு விஜயம் செய்த எமது மாணவர்கள் அங்குள்ள பல்கலைக்கழகங்களின் வசதிகளுடன் எமது பல்கலைக்கழ கத்தை ஒப்பிட் டுப்பார்க்கும் போது மிகவும் வசதிகளெதுவும் அற்றதாகவே காணப்படுவதாக மாணவர்கள் கொந்தளிக்கிறார்கள் என்றார்.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்திற்கு வருடாந்தம் ஐந்நூறு மில்லியன் தேவையாக உள்ள போதும் தற்போது 150 மில்லியனே தருவதாகக் கூறியுள்ளார்கள். இது பெரும்பாதிப்புக்குரிய விடயமாகும் என்று கூறியுள்ளார்.

# சக ஊழியர்களின் இம்சையால் ஊழியர் தற்கொலை முயற்சி!

யாழ். பல்கலைக்கழகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் சக ஊழியர்களின் இம்சை தாங்க முடியாத நிலையில் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட தற்கொலை முயற்சி பின்னர் கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.. சம்பந்தப்பட்டவர் பல்கலைக்கழகத்திலுள்ள முற்றாகக் கண்ணாடியால் மூடப்பெற்ற அறையொன்றினுள் நுழைந்து உட்புறமாகத் தாழிட்டு நீண்டநேரம் அதற்குள் இருந்துள்ளார் பின்னர் துணைவேந்தர் அளித்த உறுதி மொழியை அடுத்து வெளியே வந்தவர் உடனடியாக பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார். (27)

# இஸ்லாமியக் குழுவினால் பெண்மணி சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு - ஏறாவூரில் முஸ்லிம் வயோதிபப் பெண்மணியொருவர் இஸ்லாமியக் குழுவினால் நேற்று அதிகாலை சுட்டுக கொல்லப்பட்டுள்ளார். கையது மொகமட் ஆயிஷா (வயது - 69) என்ற இப்பெண்மணி காட்டுப்பள்ளி வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது மகனைத் தேடிச் சென்ற அக்குழுவினர் அவர் வீட்டில் இல்லாததனால் வீட்டைச் சோதனையிட முற்பட்டபோது துப்பாக்கி தாரி ஒருவருடன் இவர் சச்சரவில் ஈடுபட்டபோதே சுட்டுக்கொல் லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் அக்குழு இவரது மகளான பௌசியா அகமட் என்ற 36 வயதுடைய பெண்ணையும் சுட்டுள்ளனர். சென்ற ஞாயிறு இரவு மட்டக்களப்பின் வடக்கே 35 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள காவத்தமுனையில் இரண்டு வீடுகளின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட இஸ்லாமிக் குழுவின் உறுப்பினர்களே இவர்கள் என நம்பப்படுகின்றது.

சூதாட்டம், போதைப் பொருள் பாவனை, பெண்களைக் கேலி செய்வது போன்ற இஸ்லாமிய விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கடந்த வாரம் இக்குழு எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அனைத்துச் சம்பவங்களும் முஸ்லிம்களின் கிராமங்களிலும், நகரங்களிலுமே நடைபெற்றிருப்பதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# சமாதானம் தொடர்பாக பொதுக் கூட்டங்களில் கருத்துக் கூறுவதை சந்திரிகா தவிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் 'சமாதானம் தொடர்பாக அண்மைக் காலமாக பொதுக்கூட்டங்களில் கருத்துகள் கூறுவதை சனாதிபதி தவிர்த்து வருகிறார்.சனாதிபதி நோர்வே தரப்புடன் புதிய சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளின் மத்தியில் நேற்று கண்டியில் நீர்விநியோகத் திட்டம் ஒன்றை சனாதிபதி திறந்து வைத்தார் எனினும் அந்த நிகழ்வில் அவர் அரசியல் சம்பந்தமாக எவ்வித கருத்துக் களையும் தெரிவிக்கவில்லை. இது ஊடகவியலாளர் களை பொறுத்தமட்டில் கூட ஏமாற்றமான விடயமாக அமைந்திருந்தது. (32)

# அவசர சந்திப்புக்கு சந்திரிகா ஜே.வி.பிக்கு அழைப்பு

இன்று மாலை 5 மணியளவில் ஜே.வி.பியுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசர சந்திப்பொன்றை நிகழ்த்தவுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஜே.விபி.யுடனான சந்திப்பில் காரசாரமான விவாதம் எழுந்தமையும், கட்சித் தலைமையுடன் விவாதிக்க வேண்டிய விடயங்களை, தன்னிச்சையாக ஊடகவியலாளருடன் பகிர்ந்து கொண்டமைக்காக ஜே.வி.பியை சந்திரிகா கடுமையாகக் கண்டித்தமையும் அறிந்ததே. இச் சந்திப்பின் இடையில், சனாதிபதி சந்திரிகா கூட்டத்திலிருந்து கோபமாக வெளியேறியதுடன், அடுத்த சில நாட்களில், கட்சித் தலைமையிலிருந்தும் இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்நிலையில், மீண்டுமொரு அவசர சந்திப்பிற்கு ஜே.வி.பியை அழைத்துள்ள சனாதிபதி சந்திரிகா, முக்கிய சில விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தவிர, விவசாய மற்றும் நீர்ப்பாசன நிலவள அமைச்சுக்களின் கீழிருந்த சில விடயங்களை, ஆற்றுவள மற்றும் ராஜரட்ட முன்னேற்ற அமைச்சுக்களின் கீழ் கொண்டுவந்தமை தொடர்பாகவும் விவாதிக்கப்படும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, சனாதிபதி சந்திரிகா உருவாக்கியுள்ள பிறிதொரு மட்டுப்படுத்தப்பட்ட இடைக்கால நிர்வாக அலகின் கீழ்ப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதும் இச் சந்திப்பில் சனாதிபதி சந்திரிகாவின் திட்டமாக உள்ளது என வேறொரு கொழும்புப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

# ஐக்கிய.ம.சு.மு.தலைமைப் பதவிக்கு வேளை வரும் போது முயற்சிப்பேன்

### அமைச்சர் அநுரா பண்டார நாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைப் பதவிக்கு சரியான நேரத்தில் மீண்டும் முயற்சிப்பேன் என அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பதவிக்கு நான் தகுதியானவன் என நினைத்திருந்தபோதிலும், சனாதிபதியின் முடிவு வேறு விதமாக இருந்தது என இவ்விடயம் குறித்து அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமைப் பதவிக்கு நானே சரியான தெரிவு என ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன உட்பட பலரும் கருதியதாகவும் தெரிவித்துள்ள அநுரா பண்டாரநாயக்க, தொடர்ந்தும் கட்சியின் வளர்ச்சிக்கு உழைக்கப் போவதாகவும் கூறியுள்ளார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து திடீரென இராஜினாமாச் செய்த நிலையில், கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டி ஒன்று நிலவியது.

தலைமைப் பதவியில் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க மற்றும் அமைச்சரும் சனாதிபதியின் சகோதர ருமான அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இந்நிலையில் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவை சனாதிபதி சந்திரிகா ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக நியமித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### சனாதிபதி...

இதேவேளை அரசியல் யாப்பு விவகார அமைச்சர் மல்வத்தை மகாநாயக்கர் ஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரரை நேற்றுக் காலை சந்தித்து உரையாடிய போது இது தொடர்பாகத் தெரிவிக்கையில்

அதிகாரம் என்பது புத்தகத்தில் இருக்கும் அதிகாரம் அல்ல. நாட்டின் அதிகாரம் மிகப்பெரியது. என்றே நான் நினைக்கின்றேன்.

சனாதிபதி பாராளுமன்றத்திற்கு போட்டியிடப் பயப்படமாட்டார். அதற்கு எந்தவிதத் தடங்கலும் இல்லை. அவர் ஒரு வாரத்தில் அல்லது ஒரு வருடத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பார்.

அவர் சனாதிபதிப் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வார். பின்னர் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### யாழ். உசன்...

கள் தொடர்பாக விளக்கமளித்ததுடன், படையினரது வாழ்வுரிமை மீறல்கள் இராணுவக் கெடுபிடிகள் குறித்து தமது ஆட்சேபங்களையும் வெளிப்படுத்தினர்.

இப்போராட்டத்தின் முடிவில் உசன் பிரதேச மக்கள் பிரதிநிதிகளால் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசனிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. (33, 27)

### அமெ...

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர் றிச்சட் ஹிட் அரச தரப்பு அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற .கண்ணிவெடி அகற்றும் சமுகத்தவர்களையும் சந்திக்கவுள்ளார். சிறிலங்கா அரசாங்கத்திற்கு மனிதநேய அமெரிக்கக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் சர்வதேச தரத்தை எட்டும் வகையிலான ஆலோசனைகளையும் வழங்க இந்த நிபுணர்கள் முன்வந்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் 2003 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்திற்கு கண்ணிவெடி அகற்றுவதற்கான உபகரணங்கள் மற்றும் ஆலோசனை வழங்கும் நோக்கில் அமெரிக்க அரசு சிறிலங்கா அரசுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

### நாடு...

களும் வழமை போல் இயங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்; இவ் வருடம் 14,000 மாணவர்களுக்கும் அதிகமாகப் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவுள்ளார்கள் என்றும இது வழமையை விட மிகவும் அதிகமான தொகை என்றும் குறிப்பிட்டுள்ளார்.இப் பல்கலைக்கழக அனுமதி தவிர, மேலதிக விசேட துறைகளுக்காக தகைமையுள்ள 390 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பத்துறைக்கான அனுமதியை இரண்டு மடங்காகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித் தொழில்நுட்பத் துறைக்கான அனுமதியையும் கணினி விஞ்ஞானத் துறைக்கான அனுமதியையும் , இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.இது தவிர, தாதியருக்கான விஞ்ஞானத் துறையொன்றை ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலும், சுகாதார முன்னேற்றம் குறித்த ஓர் துறையை ராஜரட்ட பல்கலைக் கழகத்திலும் புதிதாக அறிமுகம் செய்திருப்பதால், அதற்கும் 50இற்கும் அதிகமான மாணவர்களைத் தேர்வு செய்யவும் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடுதழுவிய ரீதியில் 14 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லவுள்ளார்களாயினும், இந்த அனுமதி பெற்றவர்களுக்கான பெயர் விபரங்களின் முழுத் தகவலும் இவ்வருடம் டிசம்பர் 11ஆம் திகதியளவிலேயே உத்தியோக பூர்வமாக வெளியாகும் என்று மேலும் தெரியவருகிறது.

### புலிகள்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட மூவரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிசார் கூறினார். (32)

### சமாதானம்...

களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் கூடுதலான யுத்த நிறுத்த மீறல்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இடம்பெற்றிருப்பதாகவும், இதற்கு அடுத்த படியாக யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்பொழுது மிகவும் பின்தங்கிப் போயுள்ள நாட்டின் பொருளாதார கல்வி, சமூக மேம்பாட்டு அபிவிருத்திகளை மீளக்கட்டியெழுப்புதல் அவசியமானது.

அரசு- புலிகளுக்கிடையான பேச்சுவார்த்தைகள் தொடரப்பட்டு சமாதானம் நிலை பெற்றாலே இந்த அபிவிருத்திகள் சாத்தியப்பாடுடையதாக இருக்கும். இதனால், உடனடியாகவே புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க சனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறு சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கு அரச படைகளும் புலிகள் தரப்பும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

யாழ். குடாநாட்டின் சமகால நிலவரங்கள் தொடர்பாக அறிவதற்காக யாழ். வந்த இவர் யாழ். மாவட்ட படைத் தளபதி சுசில் சந்திரபால உட்பட அதிகாரிகளைப் பலாலி படைத் தலைமையகத்தில் வைத்து சந்தித்துப்பேசியதுடன், யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. மோகனதாஸ் மற்றும் பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்தார் யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்தின் மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இதில், குடாநாட்டு மக்களது சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான மனநிலைகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்போது புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படல் வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பு எனப் பொது அமைப்பினர் அவருக்குத் தெளிவுபடுத்தினர். அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் படை உயரதிகாரிகளையும் தனியாகச் சந்தித்துள்ளார். இதனையடுத்து அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்த அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி யோசனைக்குப் பதிலாக சனாதிபதியும் யோசனை ஒன்றை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார். ஒரு பக்க யோசனை குறித்து பேசுவதைக் காட்டிலும் இரண்டு பக்கங்களினதும் யோசனைகளை ஆராய்வது சிறந்தது என்பதையே கருத்தாக வெளியிட்டார். தமது யோசனை தொடர்பாக ஆராய சனாதிபதி அனைத்துக் கட்சிகளையும் கொண்ட குழுஒன்றை அமைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (33,27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.